வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 28.09.2024 சனிக்கிழமை இதழ் : 272 பக்கங்கள் : 12

# எமக்கு பின்னால் சிறந்த அணி இனிமேல் அசைக்கவேமுடியாது!

## ஜனாதிபதி அநுரகுமார பெருமிதம்



கொழும்பு, செப்ரெம்பர் 28

**நாட்டைக் கட்டியெழுப்ப மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை நிறைவேற்றும் திறனும் அர்ப்பணிக்கப்பட்ட திறமையான குழுவும் தன்னிடம் உள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**

எங்களின் உறுதியை அசைக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது எக்ஸ் தளத்தில் இட்டுள்ள பதிவில்,

ஓர் ஐக்கிய அணியாக நாட்டை கட்டியெழுப்பும் பங்கை நிறைவேற்றும் திறன் எங்களிடம் உள்ளது.

மேலும் இந்த பணிக்காக அர்ப்பணிக்கப்பட்ட திறமையான குழுவையும் நாங்கள் கொண்டுள்ளோம். அத்துடன், எங்களின் உறுதியை அசைக்க முடியாது.

அதேவேளை, அனைத்து குடிமக்களின் சமூக பாதுகாப்பை உறுதி செய்யும் அதேவேளையில் சட்டத்தை மதிக்கும் தேசத்தை உருவாக்குவதற்கும் ஒழுக்கமான சமுதாயத்தை வளர்ப்பதற்கும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். இது சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கொள்கையை உயிர்ப்பிக்கிறது - என குறிப்பிட்டுள்ளார். (அ)

# பதில் பொலிஸ் மா அதிபராக பிரியந்த வீரசூரிய நியமனம்



கொழும்பு, செப். 28

பதில் பொலிஸ் மா அதிபராக மூத்த பிரதி பொலிஸ் அதிபர் பிரியந்த வீரசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசமைப்புக்கு அமைவாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இந்த நியமனத்தை செய்துள்ளார். இதன்படி, பதில் பொலிஸ் மா அதிபருக்கான நியமன கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க ஜனாதிபதி

11

# ஒரே சின்னத்தின் கீழ் போட்டி; ரணில் தலைமையில் கூட்டம்

கொழும்பு, செப். 28

பொதுத் தேர்தலை அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒரே சின்னத்தில் போட்டியிடுவது குறித்து ஆராய முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் முக்கிய சந்திப்பு ஒன்று நடைபெற்றுள்ளது.

கொழும்பு மலர் வீதியில் அமைந்துள்ள அரசியல் பணிமனையில் நேற்றுமுன்தினம் இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இந்த சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிட்ட ஐ. தே. க.வின் முன்னாள் பாராளுமன்ற

11

# ஐ. தே. க., ஐ. ம. ச. கூட்டணியில் நாம் இணையப்போவதில்லை!

## பிரசன்ன ரணதுங்க அறிவிப்பு



கொழும்பு, செப். 28

பாராளுமன்றத் தேர்தலில் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சிகளிடையே நடக்கும் கலந்துரையாடலில் நாம் இல்லை. சிறீ லங்கா சுதந்திர கட்சி மற்றும் இடதுசாரி கொள்கை

11

# நாணய நிதியத்துடன் பேச்சுக்கள் நிறைவு

## மத்திய வங்கி ஆளுநர் தகவல்



கொழும்பு, செப். 28

சர்வதேச நாணய நிதியத்துடனான கடன் மறுசீரமைப்புக்கான வேலைத் திட்டங்கள் அநேகமாக நிறைவடைந்துள்ளன. தற்போதைய வேலைத் திட்டங்களை அவ்வாறே முன்னெடுத்துச் சென்றால் விரைவில் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளை நிறைவுசெய்ய முடியும் என்று மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த செயற்பாடுகளை அவ்வாறே முன்னெடுத்து செல்வதா அல்லது நாணய நிதியத்துடன்

11

# இலத்திரனியல் கடவுச்சீட்டுக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை

கொழும்பு, செப். 28

இரண்டு தனியார் நிறுவனங்களிடம் இருந்து 7 இலட்சத்து 50 ஆயிரம் இலத்திரனியல் கடவுச்சீட்டுகளை முறையான கொள்முதல் நடைமுறையைப் பின்பற்றாமல் கொள்வனவு செய்வதற்கு கடந்த அரசாங்கத்தின் அமைச்சரவை எடுத்த தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்தது.

முற்றிலும் சட்டவிரோதமான முறையில் இந்த மின் கடவுச்சீட்டுக்களை கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ளதாக சுட்டிக்காட்டி 'எபிக் லங்கா' தனியார் நிறுவனம் தாக்கல் செய்த எழுத்தாணை மனுவை பரிசீலித்த

11

# படையினரால் வாழ்வாதாரம் பாதிப்பு

## வடக்கு அழகக கூட்டுறவுச்சங்கம் முறைப்பாடு

கிளிநொச்சி, செப். 28

இராணுவத்தினர் குறைந்த செலவில் நடத்துகின்ற அழகங்களினால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் உடனடியாக தடுத்து நிறுத்துமாறு வடக்கு மாகாண அழகக கூட்டுறவுச்சங்கங்களின் சம்மேளன உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று கிளிநொச்சியில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர்கள் குறித்த விடயத்தை தெரிவித்தனர்.

அவர்கள் தொடர்ந்து தெரிவிக்கையில்-

வடக்கு மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் இராணுவத்தினர் அழககங்களை நடத்துவதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் தடுத்து நிறுத்த ஜனாதிபதி

11

# வடக்கு விவசாய கண்காட்சி ஒக். 2, 3, 4ஆம் திகதிகளில்!



யாழ்ப்பாணம், செப். 28

வடக்கு மாகாணம் தழுவிய விவசாயக் கண்காட்சி எதிர்வரும் ஒக்ரோபர் 2, 3, 4ஆம் திகதிகளில் திருநெல்வேலியில் நடைபெறவுள்ளது என்று பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அஞ்சனா சிறீரங்கன் தெரிவித்துள்ளார்.

11

# பெரமுனவிலிருந்து விலகி சென்றவர்களுக்கு அழைப்பு

## நாமல் ராஜபக்ஷ விடுத்தார்

கொழும்பு, செப். 28

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது சிறீ லங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகிச் சென்றவர்களை மீண்டும் கட்சியில் இணையுமாறு அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள்

11

# சிறந்த எம்.பிக்கள் வரிசை; சிறீதரன் முன்னிலையில்!



கொழும்பு, செப். 28

பாராளுமன்ற அமர்வுகளில் சிறப்பாக செயல்பட்ட தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற பெருமையை சி. சிறீதரன் பெற்றுள்ளார். 2020 தொடக்கம் 2024 வரையான காலப் பகுதியில் பாராளுமன்ற

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய மக்கள் சக்தியுடன் நாங்கள் கூட்டணியாக கலந்துரையாட தயார்

## கூறுகிறார் மனோ கணேசன்



கொழும்பு, செப்28

ஐக்கிய மக்கள் சக்தியின் உள்ளக மாற்றங்கள் நிறைவடைந்த பின்னர், பொதுத் தேர்தல் தொடர்பில் கூட்டணியாக கலந்துரையாட தயாராகவுள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து ஐக்கிய மக்கள் கூட்டணியில் அங்கம் வகிப்பதற்கான அடிப்படையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற முடியாமல் போயுள்ளது. மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதே மக்களின் நிலைப்பாடாக இருக்கிறது. எனவே, நிச்சயமாக மாற்றமொன்று ஏற்பட வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உள்ளக மாற்றங்களை செய்து கொண்டதன் பின்னர் கூட்டணியாக கலந்துரையாட முடியும். நாங்கள் தனிக் கட்சி. தமிழ் முற்போக்கு கூட்டணி என்ற அடிப்படையில் இம்முறை மேல், சப்ரகமுவ, மத்திய, ஊவா, தென் மாகாணங்களில் எங்களின் ஆதரவாளர்கள் வாக்குகளை பெற்றுக்கொடுத்திருக்கிறார்கள். எங்கள் மக்கள் எங்களின் நிலைப்பாட்டை ஏற்று நடந்திருக்கிறார்கள். அது ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் தெரியும்.

எங்கிருந்தாலும் நாங்கள் நிலைத்திருப்போம். இன்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியில் அங்கம் வகிக்கிறோம். தொடர்ந்தும் அங்கம் வகிக்கும் விருப்பத்துடனேயே இருக்கிறோம். அதற்கான அடிப்படையை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்- என்றார்.

(அ)

# புதிய அரசின் இடைக்கால பட்ஜெட் நவம்பரில் வரும்!

கொழும்பு, செப். 28

பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளமையால் 2025ஆம் ஆண்டின் முதல் காலாண்டுக்கான இடைக்கால பாதீட்டை புதிய பாராளுமன்றம் கூடவுள்ள எதிர்வரும் நவம்பர் மாதத்தில் கொண்டு வருவதற்கு புதிய அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார குழுவின் தலைவர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

அதேநேரம், 2025ஆம் ஆண்டுக்கான முழுமையான பாதீடு அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் எனவும் தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார குழுவின் தலைவர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

(அ)

# விளையாட்டுத்துறை முன்னேற்றம்; கணக்காய்வு நடவடிக்கை அவசியம்

கொழும்பு, செப்.28

செலவிடப்பட்ட ஒதுக்கீட்டின் முன்னேற்றம் குறித்து விளையாட்டு அமைச்சு விரைவான கணக்காய்வு நடத்த வேண்டும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

விளையாட்டுத்துறை அமைச்சின் செலவுகள் குறித்த புள்ளி விவரங்கள் இருந்தாலும், அதன் முன்னேற்றம் குறித்து முறையான தணிக்கை தேவை என்றும், உள்ளக கணக்காய்வு விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் பிரதமர் அறிவுறுத்தினார்.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் தலைவர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் பிரதமர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# புதிய சின்னத்தில் பொதுத்தேர்தலில் போட்டியிடுவேன்

## திலித் ஜயவீர கூறுகிறார்



கொழும்பு, செப். 28

பொதுத்தேர்தலில் புதிய சின்னத்தில் போட்டியிடுவேன். பலமான அரசியல் கூட்டணியை தோற்றுவிப்பேன். சுயாதீனமாக செயல்படுவதாக குறிப்பிட்டுக் கொள்பவர்கள் எம்முடன் கைகோக்கலாம் என மவ்பிம ஜனதா கட்சியின் தலைவர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

மவ்பிம ஜனதா கட்சியின் பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலில் கணிசமான அளவு வாக்குகளை பெற்றுக் கொண்டுள்ளேன். எனக்கு வாக்களித்த மற்றும் வாக்களிக்காத அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தேர்தல் பிரச்சாரத்தின் போது பொய்யான வாக்குறுதிகளை வழங்கவில்லை.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடுவேன். அதேபோல் 22 தேர்தல் மாவட்டங்களிலும் மவ்பிம ஜனதா கட்சியின் உறுப்பினர்களை களமிறக்குவேன். பொதுத் தேர்தலில் புதிய சின்னத்தில் போட்டியிடுவேன்.

சுயாதீனமாக செயல்படுவதாக குறிப்பிட்டுக் கொள்பவர்கள் எம்முடன் கைகோக்கலாம். பலமாக அரசியல் கூட்டணியை ஸ்தாபிப்போம்.

பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்ஷர்களைப் போன்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பொறுப்புக் கூற வேண்டும். தேசியத்தை பேசிக் கொண்டு ராஜபக்ஷர்களால் இனி ஆட்சிக்கு வர முடியாது. - என்றார்.

(ஐ)

# 53 இலட்சம் ரூபாய் நட்டஈட்டை செலுத்தினார் முன்னாள் எம். பி.

கொழும்பு, செப்28

விபத்து இடம்பெற்று இரண்டு வருடங்களின் பின்னர் தான் பயன்படுத்திய சொகுசு வாகனத்துக்கான நட்டஈட்டை அண்மையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் செலுத்தியுள்ளார்.

இது தொடர்பில் விளக்கமளித்த மேல் மாகாண சபையின் செயலாளர் தம்மிக கே. விஜயசிங்க, மேல் மாகாண சபைக்கு சொந்தமான சொகுசு வாகனத்தை பயன்படுத்திய போது விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பில் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஹான் பிரதீப் விதான கடந்த 24ஆம் திகதி மாகாண சபைக்கு 53.38 இலட்சம் ரூபாயை செலுத்தியுள்ளார் என்று தெரிவித்தார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஹான் பிரதீப் விதான கம்பஹா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக இருந்தபோது அவரின் பாவனைக்காக இந்த வாகனம் வழங்கப்பட்டது.

மேல் மாகாண சபையின் முன்னாள் சுகாதார அமைச்சர் பயன்படுத்திய சொகுசு காரே இவ்வாறு சஹான் பிரதீப் விதானவிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு பெறப்பட்ட இந்த அதி சொகுசு கார் 2022 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் கொழும்பு - பத்தரமுல்லை -பெலவத்தை இசுருபாயவுக்கு அருகில் விபத்துக்கு உள்ளாகியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# ஜனாதிபதி அலுவலக சட்ட பணிப்பாளராக மூத்த சட்டத்தரணி விஜயபண்டார நியமனம்

கொழும்பு , செப்28

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவால், ஜனாதிபதி அலுவலகத்தின் சட்டப் பணிப்பாளர் நாயகமாக சிரேஷ்ட சட்டத்தரணி ஜே.எம். விஜயபண்டார நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவால் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் சிரேஷ்ட சட்டத்தரணி ஜே.எம். விஜயபண்டாரவிடம் கையளிக்கப்பட்டது.

கொழும்பு ஆனந்த கல்லூரியின் பழைய மாணவரான விஜயபண்டார, கொழும்பு பல்கலைக்கழகத்தில் இளங்கலை பட்டம், திறந்த பல்கலைக் கழகத்தில் சட்டமானி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

சிரேஷ்ட சட்டத்தரணி ஜே. எம். விஜயபண்டார, கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் முன்னாள் விரிவுரையாளரும் ஆவார்.

(அ)

# வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலய வீதிகளையும் மக்கள் பாவனைக்காக திறப்பது நல்லிணக்கத்தை வலுவாக்கும்!

## ஜனாதிபதியிடம் அங்கஜன் இராமநாதன் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செப். 28

கொழும்பில் ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் மூடப்பட்டிருந்த இரண்டு வீதிகளை மீண்டும் மக்கள் பாவனைக்காக திறக்கப்படுவதற்கு ஜனாதிபதி உத்தரவிட்ட நிலையில், வலிகாமம் வடக்குப் பகுதியில் பாதுகாப்பு வலயத்தில் உள்ள 4 வீதிகளையும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கு யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யுத்தம் முடிவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ள போதிலும், பொதுமக்களின் வாழ்க்கைக்கு முக்கியமான பல வீதிகள் யாழ்ப்பாணத்தில் மூடப்பட்டுள்ளதால், இந்தப் பகுதிகளில் உள்ள மக்களின் அன்றாட நடவடிக்கைகள் மற்றும் போக்குவரத்து செயல்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, யாழ்ப்பாணம் - பலாலி வீதி (கிழக்கு பக்கம்): வயாவிளான் மத்திய கல்லூரிக்கு அடுத்துள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் எஞ்சியுள்ள வீதி இராணுவ கட்டுப்பாடுகளில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும். இந்த வீதி பருத்தித்துறை பொன்னாலை வீதியுடன் இணைவதுடன் உள்ளூர் போக்குவரத்துக்கு இன்றியமையாததாகும்.

அச்சுவேலி வயாவிளான் - தோலகட்டி வீதி: இந்த முக்கிய வீதி மூடப்பட்டுள்ளதால், அப்பகுதியிலுள்ள முக்கியமான அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு செல்வதற்கு இடையூறாக உள்ளது.

வயாவிளான் யாழ் விமான நிலைய ஓடுபாதை பக்க வீதி: கட்டுவன் சந்தி ஊடாக இந்த வீதியை திறப்பதன் மூலம் யாழ் சர்வதேச விமான நிலையம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளுக்கான தொடர்பை கணிசமாக மேம்படுத்த முடியும்.

காங்கேசன்துறை - கீரிமலை வீதி (ஜனாதிபதி அரண்மனை வீதி): வரலாற்று மற்றும் கலாசார தளத்திற்கு இட்டுச் செல்லும் இந்த வீதி மீண்டும் திறக்கப்படுவதால், உள்ளூர் சமூகங்கள் பயனடைவதுடன், இப்பகுதியில் சுற்றுலாவை மேம்படுத்தும்.

ஆகவே யாழ்ப்பாண மக்கள் அமைதி மற்றும் இயல்பு நிலைக்கான உறுதியையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்தியுள்ள சூழலில், இந்த வீதிகளை மீண்டும் திறக்க அனுமதிப்பதால் நல்லிணக்கம் மற்றும் பிரதேச வளர்ச்சி ஆகியன வலுவடைவதுடன், எமது மக்களின் நீண்டகால கவலையை நிவர்த்தி செய்து, அனைத்துப் பகுதிகளிலும் சமமான வளர்ச்சிக்கான உங்கள் நிர்வாகத்தின் அர்ப்பணிப்பையும் நிரூபிக்கும்.

ஆகவே இவ்வீதிகள் மீளத் திறப்பதால் யாழ்ப்பாண மக்களுக்குப் பெரிதும் பயனளிக்கும் என்பதோடு எமது தேசத்தின் அமைதியான வளமான எதிர்காலத்துக்கும் உறுதுணையாக அமையும் என்பதால், இந்த வேண்டுகோளுக்கு உங்களது கவனம் செலுத்தப்படும் என நான் நம்புகிறேன்- என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
28.09.2024 சனிக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 12

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## வடக்கு, கிழக்கில் ஜே. வி. பி.

ஜே. வி. பி. தொடர்பில் வடக்கு, கிழக்கில் குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியில் ஆர்வம் ஏற்பட்டிருப்பதான தோற்றம் தெரிகின்றதா? இதுவரையில் தேசிய கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சி மற்றும் சிறீ லங்கா சுதந்திர கட்சி தமிழ் மக்கள் மத்தியில் ஊடுருவும் செயல்பாடுகளை முன்னெடுத்து வந்திருக்கின்றன. அண்மைக்காலத்தில் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ராஜபக்ஷக்களின் பொதுஜன பெரமுன ஆகியவை தங்களுக்கான ஆதரவுத் தளத்தை பெருக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தன.

தமிழ் மக்கள் மத்தியில் தென்னிலங்கை கட்சிகள் ஆதரவை பெறுவதற்கு இரண்டு வழிமுறைகளை மேற்கொள்வதுண்டு. ஒன்று நேரடியாக உள்நுழைவது. இரண்டாவது, தங்களுடன் கூட்டு வைத்திருக்கும் கட்சிகளுக்குள்ளால் நுழைவது. கட்சிகளுக்குள்ளால் நுழைவதுதான் அதிகம். அரசாங்கங்களுடன் கூட்டு வைத்துக் கொள்ளும் கட்சிகளுக்குள்ளால்தான் அதிகம் இவ்வாறான உள்நுழைவு இடம்பெறுவதுண்டு .

இந்த வரிசையில் தற்போது ஜே. வி. பியும் இடம்பிடித்திருக்கின்றது. ஒரு காலத்தில், யாழ்ப்பாணத்தில் ஜே. வி. பியின் ஸ்தாபகர் ரோகண விஜயவீர பேசிக் கொண்டிருக்கும்போது கல்லால் அடிக்கப்பட்டார். காயத்திலிருந்து வழிந்து கொண்டிருந்த இரத்தத்தையும் துடைக்காமல் விஜயவீர பேசிக் கொண்டிருந்தார். இன்று நிலைமைகள் வேறு. இன்றைய ஜே. வி. பி. அதிகார அரசியலின் அங்கமாகியிருக்கின்றது. அதிகார அரசியலுக்குள் வந்துவிட்டால் அதனை பேணிப்பாதுகாப்பதற்கு பணியாற்ற வேண்டிய நிரப்பந்தம் ஏற்பட்டுவிடும். இந்தப் பின்புலத்தில் ஜே. வி. பியும் தங்களுக்கான தமிழ் ஆதரவுத் தளத்தை பெருக்கிக்கொள்ள முயற்சிக்கும். ஏனைய தென்னிலங்கை கட்சிகளைப்போல், ஜே. வி. பியும் தமிழ் மக்களின் வாக்குகளை பெறும் உத்திகளை கையாளும். குறிப்பாக, இளைய தலைமுறையினரே ஜே. வி. பியின் பிரதான இலக்காகும்.

எவ்வாறான விமர்சனங்களை முன்வைத்தாலும், தென்னிலங்கை கட்சிகளுக்கு வாக்களிக்கும் தமிழ் மக்கள் இருக்கின்றனர். தமிழ்த் தேசிய அரசியலை அவர்கள் ஒரு விடயமாக எடுப்பதில்லை. அரசாங்கத்திலுள்ள கட்சிகளை ஆதரித்தால், அவர்கள் மூலம் நன்மை கிடைக்குமென்று மக்கள் நம்புகின்றனர். அவ்வாறு நம்புமளவுக்கு மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். தமிழ்த் தேசியம் பேசும் அரசியல்வாதிகளும் மக்களின் அன்றாட பிரச்னைகளை உற்றுநோக்குவதில்லை.

ஆகக் குறைந்தது அந்தப் பிரச்னைகள் தொடர்பில் ஆறுதலாக உரையாடுவதும் இல்லை. தேர்தல் காலத்தில் மட்டும்தான் தமிழ்த் தேசியர்கள் மக்களை சந்திப்பது உண்டு. இதன் காரணமாக மக்கள் கோபமடைந்திருக்கின்றனர். இவ்வாறு கோபமடைந்திருக்கும் மக்கள் தங்களின் கோபத்தை காண்பிப்பதற்கு தென்னிலங்கை அரசியல்வாதிகளை நோக்கிச் செல்வது உண்டு. இந்த இடைவெளிகளையே தென்னிலங்கை கட்சிகள் பயன்படுத்திக்கொள்கின்றன.

அநுரவின் வெற்றியைத் தொடர்ந்து, ஜே. வி. பி. அரசாங்கம் அதிரடியாக முன்னெடுத்துவரும் சில விடயங்கள் மக்களை கவர்வனவாகவே இருக்கின்றன. தமிழ் மக்களும் கவரப்படுகின்றனர். இந்தக் கவர்ச்சியை பயன்படுத்தி தமிழ் மக்கள் மத்தியில் உள்நுழைவது தொடர்பில் ஜே.வி. பி. அதிக அக்கறை காண்பிக்கும். முக்கியமாக தமிழ் இளையோரை இலக்கு வைத்துச் செயல்படும். தமிழ்த் தேசியர்களின் ஆகக் குறைந்தது இளைஞர் கட்சிக் கட்டமைப்புக்கூட இல்லை. பெண்களுக்கான செயல்திட்டங்கள் இல்லை.

இந்த நிலையில் தமிழ் மக்கள் மத்தியில் ஜே. வி. பி. செல்வாக்கை பெற்றால் அதில், ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. தமிழ் அரசியல் கட்சிகள் விழித்துக் கொள்ளாவிட்டால் நிலைமை தலைகீழாகும். தமிழ் அரசியல் கட்சிகள் பலவற்றில் நம்பிக்கைக்குரிய இரண்டாம் தலைமுறை தலைவர்கள் இல்லை. இளைஞர்களை ஆகர்ஷிக்கக்கூடிய ஆளுமைகள் இல்லை. இருப்பவர்களில் அநேகர் ஓய்வூதிய காலத்தையும் அதிகம் தாண்டியவர்கள். இவ்வாறானவர்களைக் கொண்டு புதியதோர் அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்த முடியாது.

# கொள்கை வட்டி வீதங்களை மாற்றமின்றி பேண இலங்கை மத்திய வங்கி தீர்மானம்!

கொழும்பு, செப். 28

கொள்கை வட்டி விகிதங்களை மாற்றமின்றி தொடர்ந்தும் ஒரே மட்டத்தில் பேண இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இலங்கை மத்திய வங்கியின் நாணய சபை மீளாய்வு கூட்டத்தின் போது, இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கமைய துணை நில் வைப்பு வசதி விகிதம் 8.25 சதவீதமாகத் தொடர்ந்தும் பேணப்படவுள்ளது. அத்துடன், துணைநில் கடன் வசதி விகிதம் 9.25 சதவீதமாக மாற்றமின்றி பேணப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதேவேளை, உள்ளூர் சந்தையிலிருந்து கணிசமான டொலர்களை மத்திய வங்கி கொள்வனவு செய்ததன் ஊடாக இலங்கையின் உத்தியோகப்பூர்வ கையிருப்பு கடந்த ஒகஸ்ட் மாதத்தில் 600 கோடி அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது. இதில், சீன மக்கள் வங்கியின் பரிமாற்ற வசதியும் அடங்குவதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (அ)

# புலமைப்பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்துமாறு பெற்றோர் கோரிக்கை!

கொழும்பு, செப். 28

இம்முறை இடம்பெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை பிரச்னை தொடர்பில் ஒரு வாரத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பரீட்சைகள் திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

பெற்றோர்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக்கமைய விசாரணை முன்னெடுக்கப் பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் மனநலன் கருதி இந்த புலமைப்பரிசில் பரீட்சை பிரச்னைக்கு உடனடி தீர்வுகளை வழங்குமாறும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பரீட்சை திணைக்களத்தை அறிவுறுத்தியுள்ளது

இதேவேளை, தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்துமாறு பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் பெற்றோர் கோரியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இதன்படி, குறித்த சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் பெற்றுக் கொள்வதற்காகக் கல்வி அமைச்சு, பரீட்சைகள் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகள் மற்றும் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பெற்றோர்கள் சிலர் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டிருந்தனர். (அ)

### கடவுச்சீட்டு கொள்வனவு விவகாரம்

# அமைச்சரவை தீர்மானத்துக்கு இடைகாலத் தடை பிறப்பிப்பு!

கொழும்பு, செப். 28

இரண்டு தனியார் நிறுவனங்களிடமிருந்து 7 இலட்சத்து 50 ஆயிரம் கடவுச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்காகக் கடந்த அரசாங்கத்தில் மேற்கொண்ட அமைச்சரவை தீர்மானத்தினை நடைமுறைப்படுத்துவதைத் தடுக்கும் வகையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது.

எபிக் லங்கா தனியார் நிறுவனத்தினால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப் பேராணை மனுவைப் பரிசீரலனை செய்ததை அடுத்து மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் மொஹமட் லபார் தாகீரினால் எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி வரை அமுலில் வகையில் இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம், உரியக் கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றாமல் இந்தக் கடவுச்சீட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்குத் தீர்மானம் எடுத்துள்ளதாகவும் இது முற்றிலும் சட்டவிரோதமானது எனவும் மனுதாரர் தரப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர் பாராத ஒருவேலை முடியும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நினைத்ததை முடிப்பீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**மிதுனம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புது முடிவுகள் எடுப்பீர்கள். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். இனிமையான நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் அதிருப்தி அடைவார்கள்.

**சிம்மம்**
குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் கனிவாகப் பழகுங்கள். மறைமுக எதிர்ப்புகள் வந்துநீங்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**கன்னி**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். திடீர்பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். புது தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். நன்மை நடக்கும் நாள்.

**துலாம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் புகழ்பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். சாதிக்கும் நாள்.

**விருச்சிகம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும்.

**மகரம்**
சகோதரர் வகையில் ஒற்றுமை பிறக்கும். கேட்ட இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். மனைவி வழியில் ஆதரவு பெருகும். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**கும்பம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளை செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**மீனம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். நினைத்தது நிறைவேறும் நாள்.

# விஜய் கட்சியின் மாநாட்டுக்கு 17 நிபந்தனைகளுடன் அனுமதி

சென்னை, செப். 28

நடிகர் விஜய் ஆரம்பித்திருக்கும் தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநில மாநாட்டை விக்கிரவாண்டியில் ஒக்ரோபர் 27ஆம் திகதி நடத்த 17 நிபந்தனைகளுடன் பொலிஸார் அனுமதி வழங்கியுள்ளனர்.



தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய், தனது கட்சிக்கான முதல் மாநாட்டை விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அருகே வி.சாலை என்ற இடத்தில் செப்ரெம்பர் 23ஆம் திகதி நடத்த திட்டமிட்டு, பொலிஸாரிடம் அனுமதி கோரியிருந்தார். சில நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டது. இந்த நிலையில், மாநாட்டுத் திகதி ஒக்ரோபர் 27இற்கு தள்ளிவைக்கப்பட்டது. அந்த நாளில் மாநாடு நடத்த அனுமதி கோரி த. வெ. க. மாநிலப் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், விழுப்புரம் பொலிஸ் அதிகாரியிடம் மீண்டும் மனு வழங்கினார்.


இதையடுத்து, ஒக்ரோபர் 27ஆம் திகதி மாநாடு நடத்த 17 நிபந்தனைகளுடன் பொலிஸ் துறையினர் அனுமதி வழங்கியுள்ளனர். இதன்படி, எக்காரணத்தை கொண்டும் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தக் கூடாது. தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்துக்கு இடையூறாக விளம்பர பதாகைகள் வைக்கக் கூடாது உள்ளிட்ட 17 நிபந்தனைகளுடன் மாநாட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டது. (எ)

# அவசரகால நிலையின்போதுகூட இவ்வளவு நாள் சிறை கிடையாது

## செந்தில் பாலாஜி விடுதலை குறித்து ஸ்டாலின்

சென்னை, செப். 28

"அவசரகால நிலையின்போது கூட இவ்வளவு நாட்கள் சிறைத் தண்டனை விதிக்கப்படவில்லை" என்று முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியை வரவேற்று முதல்வர் ஸ்டாலின் கருத்து வெளியிட்டுள்ளார்.



ஸ்டாலின் வெளியிட்ட சமூக வலைத் தளப்பதிவில் தெரிவித்தவை வருமாறு, "சகோதரர் செந்தில் பாலாஜிக்கு 471 நாட்களுக்கு பிறகு உச்ச நீதிமன்றத்தால் பிணை கிடைத்துள்ளது. அமுலாக்கத் துறை என்பது, அரசியல் எதிரிகளை ஒடுக்கும் துறையாக மாற்றப்பட்ட தற்போதைய சூழலில், அதற்கு உச்ச நீதிமன்றம் ஒன்றே விடியலாக இருக்கிறது. அரசியல் சதிச்செயல்கள் 15 மாதங்கள் தொடர்ந்தன. கைது செய்து சிறையிலேயே வைப்பதன்மூலம் செந்தில் பாலாஜியின் உறுதியை குலைக்க நினைத்தனர். ஆனால், முன்னிலும் உரம் பெற்றவராக சிறையில் இருந்து வெளியே வரும் செந்தில் பாலாஜியை வருக வருக என வரவேற்கிறேன். உன் தியாகம் பெரிது. உறுதி அதனினும் பெரிது" என்று முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

# செந்தில் பாலாஜி இப்போது தியாகியா?


## தமிழிசை, சீமான் விமர்சனம்



சென்னை, செப். 28

முதல்வருக்கு, செந்தில் பாலாஜி முன்பு துரோகியாக இருந்தார், அவரது கட்சிக்கு வந்தவுடன் இப்போது தியாகியாகி விட்டாரா என முன்னாள் ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன், நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆகியோர் கேள்வியுடன் விமர்சித்துள்ளனர். இதுதொடர்பில் தமிழிசை தெரிவித்தவை, "செந்தில் பாலாஜி மீது வழக்கு போட்டது தற்போதைய முதல்வர் மு. க. ஸ்டாலின்தான். எதிர்க்கட்சியில் இருக்கும்போது துரோகியாக இருந்தவர், தன் கட்சிக்கு வந்தவுடன் தியாகியா? அவர் என்ன சுதந்திர போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டா சிறைக்கு சென்றார்? தியாகி என்று கூறுவதற்கு. முறைகேடு செய்வதில் உறுதியாக இருந்தவரை, சிறையில் உறுதியாக இருந்தார் என்று பாராட்டுகிறார் முதல்வர். இந்தியா கூட்டணி இந்த பிணையை கொண்டாடுகிறது. ஆனால், இது பிணையே தவிர விடுதலை அல்ல" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சீமான் கூறுகையில், "தமிழகத்தில் திருடுவது, இலஞ்சம் வாங்குவது, கள் எச்சாராயம் விற்பது போன்றவைதான் தற்போது தியாகமாக கருதப்படுகிறது. அ. தி. மு. க. ஆட்சியின்போது தி. மு. க.



தொடர்ந்த வழக்கில்தான் செந்தில் பாலாஜி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அவரை சிறைக்கு அனுப்பியதும் தி. மு. கதான். அவரை தற்போது வரவேற்பதும் தி. மு. க.தான். அவர்களது கட்சியில் இருந்தால் தியாகம். அதே அடுத்த கட்சியில் இருந்தால் ஊழல், குற்றச்சாட்டாக மாறி விடும்"-என்றார். (எ)

# "குற்றமற்றவன் என்று நிரூபிப்பேன்"



சென்னை, செப். 28

"அரசியல் காழ்ப்புணர்ச்சியால் என் மீது வழக்கு தொடரந்துள்ளனர். வழக்கை நீதிமன்றத்தில் சட்டப்படி எதிர்கொண்டு நான் குற்றமற்றவன் என்று நிரூபிப்பேன். என் மீது அன்பும், நம்பிக்கையும் வைத்துள்ள முதல்வருக்கு என் வாழ்நாள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, அமைச்சர் உதயநிதிக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்"- இவ்வாறு முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் வேண்டும்

## க.வி.விக்னேஸ்வரன் கோரிக்கை

கொழும்பு, செப். 28

**இளையோர்களுக்கு இடமளித்து, எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட மாட்டேன் எனவும், ஆனால் தனது அரசியல் பயணம் தொடரும் எனவும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

இன்று, ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையில், இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது கட்சியான தமிழ் மக்கள் கூட்டணி ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம், தமிழ்த் தேசியத்தை சிதையவிடாது பாதுகாத்துக் கொண்டு தமிழ் மக்களிற்குரிய உரித்துக்களை வென்றெடுப்பதே ஆகும்.

எமது கட்சியில் உள்ள துடிப்பு மிக்க இளைஞர்களுக்கு வழிவிட்டு, அரசியலில் முதிர்ச்சி உள்ளவர்கள், அவர்களுக்கு பக்கபலமாக நின்று வழிகாட்ட வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

என்னைப் போல், மற்றைய



தமிழ் கட்சிகளில் உள்ள அரசியல் முதிர்ச்சி கொண்டவர்கள், தாம் வழிகாட்டியாக நின்று கொண்டு, இளைஞர்களுக்கு எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்-என்றார். (அ)

# நிலாந்த ஜெயவர்த்தனவுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு!

கொழும்பு, செப். 28

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, இழப்பீடாக செலுத்த வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்ட, 74 மில்லியன் ரூபாவை செலுத்த தவறியமைக்காக, அரச புலனாய்வு பிரிவின் முன்னாள் தலைவர் நிலாந்த ஜெயவர்த்தனவுக்கு எதிராக, நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

ஏழு நீதிபதிகள் அடங்கிய குழாம், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் ஏழாம் திகதி, நிலாந்த ஜெயவர்த்தனவை, நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என உத்தரவிட்டுள்ளது.

சட்ட மா அதிபரின் சார்பில் ஆஜராகிய சிரேஸ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், நிலாந்த ஜெயவர்த்தன, இழப்பீட்டு அலுவலகத்திற்கு, இழப்பீட்டை செலுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் அவருக்கு எதிராக எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் குறித்து விபரித்தார்.

நிலாந்த ஜெயவர்த்தன சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி, தனது கட்சிக்காரர், இதுவரை பத்து மில்லியன் ரூபாவை செலுத்தியுள்ளார் எனவும், அவர் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளதால், அவர் எஞ்சிய தொகையை செலுத்துவதற்கு மிகுந்த சிரமப்படுகின்றார் எனவும், அவர் வேண்டுமென்றே இழப்பீட்டை செலுத்தாமல் விடவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். (அ)

# வடக்கு மாகாண புதிய ஆளுநர் கடமைகளை பொறுப்பேற்றார்

யாழ்ப்பாணம், செப் 28

வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், நேற்று தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

ஆளுநர் செயலகத்தில் மிகவும் எளிமையான முறையில் நடைபெற்ற நிகழ்வில், மத்த தலைவர்களின் ஆசியுடன் கடமையேற்றார்.

யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபராக இருந்த நாகலிங்கம் வேதநாயகன், வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டு, கடந்த 25 ஆம் திகதி ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க முன்னிலையில் ஆளுநராகப் பதவிப் பிரமாணம் செய்திருந்தார்.

நேற்றைய கடமையேற்பு நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், மாவட்ட பதில் அரசாங்க அதிபர், திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டனர். (அ)

# ஐக்கிய மக்கள் கூட்டணியின் பிரதான பதவி நிலைகளுக்கு புதிய நியமனங்கள்

கொழும்பு, செப். 28

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி ஆகியவற்றின் பிரதான பதவி நிலைகளில் மாற்றும் ஏற்படுத்தப்பட்டுளது.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி ஆகியவற்றின் பிரதான பதவி நிலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி புதியவர்களை அப்பதவிகளுக்கு நியமிக்க முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச நேற்று நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதற்கமைய ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கரும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளராக கேகாலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிமும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்டத் தலைவர் பதவிக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

# புதிய அரசாங்கம் முன்னெடுக்கவுள்ள திட்டங்களுக்கு ஜப்பான் முழு ஆதரவு!

கொழும்பு, செப். 28

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் புதிய அரசாங்கத்தின் திட்டத்திற்கு ஜப்பான் முழு ஆதரவு வழங்குவதாக ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேகி தெரிவித்தார். ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவை நேற்று முன் தினம் சந்தித்த போதே ஜப்பானிய தூதுவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஜப்பான் அரசாங்கத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது இடைநடுவில் நிறுத்தப்பட்டிருக்கும் 11 திட்டங்கள் விரைவாக ஆரம்பிக்கப்படும் எனவும், ஊழல் மற்றும் முறைகேடுகளை ஒழிப்பதற்கான திட்டத்திற்கு ஆதரவு வழங்குவதாகவும் ஜப்பானிய தூதுவர் தெரிவித்தார்.

கண்டி நகர நீர் முகாமைத்துவத் திட்டம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தித் திட்டத்தின் இரண்டாம் கட்டம், தொலைக்காட்சி ஒலிபரப்பை டிஜிட்டல் மயமாக்கல், தேசிய ஒலிபரப்பு மற்றும் விநியோக வலையமைப்பு அபிவிருத்தித் திட்டம், அனுராதபுரம் வடக்கு நீர் திட்டத்தின் இரண்டாம் கட்டம், கிராம உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், களு கங்கை நீர் வழங்கல் திட்டம், சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகியன விரைவில் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

அத்துடன், ஹபரண- வெயங்கொட மின் கடத்தல் வலையமைப்பு மற்றும் அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் திட்டம் என்பவற்றை நிறைவு செய்ய எதிர்பார்த்திருப்பதோடு, முழுமைப்படுத்தப்பட்டிருக்கும் களனி கங்கை புதிய பாலத்தின் நிர்மாணப் பணிகளுக்கான கொடுப்பனவுகளை நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாக ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேகி இதன்போது தெரிவித்தார்.

நிகழ்வில் இலங்கைக்கான ஜப்பான் தூதரகத்தின் பிரதித் தலைவர் நயோக்கி கமோஷிடா, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரொஷான் கமகே ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# மின் கட்டணம் குறைப்பு!

கொழும்பு, செப். 28

மின்சாரக் கட்டணக் குறைப்பு தொடர்பில் பகுப்பாய்வு ஆரம்பிக்கப்படவுள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் திலக் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அதன் அறிக்கை பொது பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ளதாகவும், புதிய பாராளுமன்றக் கூட்டத்தின் பின்னர் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள் எனவும் திலக் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்

அத்துடன் மக்களுக்கு அதிக பட்ச நிவாரணம் கிடைக்கும் வகையில் மின்சார கட்டணத்தை குறைக்க வேண்டும் என்பதே புதிய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என இலங்கை மின்சார சபையின் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

# போக்குவரத்து விதிமுறை மீறல்; தர்மபுரம் பகுதியில் 12 பேர் கைது

கிளிநொச்சி, செப். 28

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில், போக்குவரத்து விதிமுறைகளை மீறிய 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணி நேரத்தில், வீதிப் போக்குவரத்து பொலிசாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது, மதுபோதையில் வாகனம் செலுத்தல், சாரதி அனுமதிப்பத்திரம் இன்மை, போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை என, பல குற்றச்சாட்டுக்களின் கீழ், 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான சந்தேக நபர்கள், பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட தடயப் பொருட்களை, நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, தர்மபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரி டி.எம்.சதுரங்க குறிப்பிட்டுள்ளார். (அ)

# 400 கிலோ கிராம் பீடி இலைகள் நீர்கொழும்பு கடற்பரப்பில் மீட்பு

கொழும்பு, செப். 28

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கடத்தப்பட்ட 400 கிலோகிராம் பீடி இலைகளுடன் டிங்கிரி படகொன்றை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

நீர்கொழும்பு கடற்பரப்பில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே 400 கிலோகிராம் பீடி இலைகளுடன் கூடிய டிங்கிரி படகொன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

14 பொதிகளில் மறைத்து கடத்தப்பட்ட 400 கிலோகிராம் பீடி இலைகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன. இந்நிலையில் கடத்தலில் ஈடுபட்டவர்களை தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ)

# ரூ.41 இலட்சம் வெளிநாட்டு சிகரெட்கள் கைப்பற்றல்!

கொழும்பு, செப். 28

757 மில்லியன் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டுத் தயாரிப்பு சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களத்தின் ஊடகப்பேச்சாளர் சீவலி அருள்கொட தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்படும் பொருட்கள் தொடர்பில் தொடர்ச்சியாக சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

அதற்கமைய இலட்சம் வெளிநாட்டுத்தயாரிப்பு சிகரெட் தொகை கைப்பற்றப்பட்டுள்ளது. 757 மில்லியன் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டுத் தயாரிப்பு சிகரெட்டுகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன் ஊடாக நாட்டிற்கு 96 மில்லியன் ரூபாய் வரி வருமானம் இழக்கப்படுதடுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைக்கத் தயார்!

## நவீன் திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, செப். 28

**பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்து களமிறங்க, ஐக்கிய தேசியக் கட்சி தயாராகவே உள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

பொதுத் தேர்தல் தொடர்பான கருத்தாடல்கள் நாட்டில் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ள நிலையில், இது தொடர்பான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அவரது அரசியல் அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைப்பது தொடர்பாக பேச்சு நடத்தினோம். ஐக்கிய மக்கள் சக்தியிலும் ஐக்கிய தேசியக் கட்சியிலும் ஒரே தரப்பினர்தான் இருக்கிறார்கள்.

இரண்டு கட்சிகளின் வாக்குகளை ஒன்றிணைத்தாலே பொதுத் தேர்தலில் பாரிய வெற்றி கிடைக்கும்.

எனவே, இதனை சாத்தியப்படுத்த இரண்டு கட்சிகளும் ஒரு பொது உடன்பாட்டுக்கு வர வேண்டும்.

எமது தரப்பினருடன் பேச்சு நடத்த, ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரு தரப்பினரும் தயாராகிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

ரணில் விக்கிரமசிங்க பொதுத் தேர்தலில் போட்டியிட மாட்டார் என்பதோடு, தேசிய பட்டியல் ஊடாகவும் பாராளுமன்றுக்கு வரமாட்டார். எனவே, சஜித் பிரேமதாஸவை பிரதமராக்க நாமும் நடவடிக்கை எடுப்போம்.

நாம் தொலைப்பேசியுடன் கூட்டணியமைத்தால் இந்த நடவடிக்கையை எடுப்பதில் பிரச்னைகள் இல்லை.

தற்போதைய நிலவரத்திற்கு இணங்க, எமது தரப்பில் பெரும்பான்மையோர் இதற்கு ஆதரவான நிலைப்பாட்டையே வெளிப்படுத்தியுள்ளனர்-என்றார். (அ)

# கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு கண் சத்திர சிகிச்சை உபகரணங்கள்!

கிளிநொச்சி, செப். 28

கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு சுமார் 7 இலட்சம் ரூபா பெறுமதியான கண் சத்திரசிகிச்சை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி ரோட்டரி கழகமும் கொழும்பு நகர் ரோட்டரி கழகம் இணைந்து 7 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கண் சத்திர சிகிச்சைக்கான உபகரணங்களை வழங்கியுள்ளன. இந்த உபகரணங்கள் கிளிநொச்சி பொது வைத்திய சாலையின் கண் சத்திர சிகிச்சை நிபுணரிடம் கையளிக்கப்பட்டன. உபகரணங்களைக் கையளிக்கும் நிகழ்வில் வைத்தியசாலைத் தரப்பினர், உபகரணங்களை வழங்கிய கழகத்தினர் கலந்து கொண்டனர்.

# முன்னாள் எம்.பிக்களின் பாதுகாப்பு நீக்கப்பட்டது

கொழும்பு, செப். 28

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர்களின் தனிப்பட்ட பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டிருந்த, அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களும் மீள அழைக்கப்பட்டுள்ளனர் என சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் பத்திநாயக்க தெரிவித்துள்ளார்.

எனினும், முன்னாள் சபாநாயகர், முன்னாள் பிரதி சபாநாயகர் மற்றும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள், தொடர்ந்தும் கடமைகளில் ஈடுபடுவார்கள் எனவும், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் பத்திநாயக்க குறிப்பிட்டார். (அ)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, செப். 28

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும், இந்த வருடத்தில் 17 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும், தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதிக்குள், 38 ஆயிரத்து 874 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 17 டெங்கு மரணங்களும் பதிவாகியுள்ளன.

அதிகளவான டெங்கு நோயாளர்கள், கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் இருந்து அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனால், மக்கள், சுற்றுச்சூழலைச் சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்க வேண்டும்.

என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு குறிப்பிட்டுள்ளது.

# மன்னாரில் காற்றாலை மின் உற்பத்தியை நிறுத்த வலியுறுத்தி தபால் அட்டைகள்!

## ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அனுப்பி வைப்பு

மன்னார், செப். 28

மன்னாரில் செயற்படுத்தப்படவுள்ள காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வை நிறுத்த வலியுறுத்தி ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு தபாலட்டை அனுப்பும் செயற்பாடு நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் மன்னார் பேருந்து தரிப்பிடத்தில் இந்த செயற்பாடு நேற்று ஆரம்பிக்கப்பட்டதுடன் மன்னாரின் மற்றைய பகுதிகளிலிருந்தும் தொடர்ச்சியாக தபாலட்டைகளை அனுப்பும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. குறித்த தபாலட்டை அனுப்பும் நிகழ்வில் நூற்றுக்கணக்கான மக்கள், மதத் தலைவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டு தபாலட்டைகளை அனுப்பி வைத்தனர். (அ)

# அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துக்கு கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனம் ஆதரவு!

கொழும்பு, செப். 28

தற்போதைய அரசாங்கத்தின் வெளிப்படை தன்மையுடன் கூடிய வேலைத்திட்டத்துக்கு முழு ஒத்துழைப்பு வழங்க கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவினர் இன்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடிய போதே இதனைத் தெரிவித்தனர்.

இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் ஊழல், மோசடி ஒழிப்பு வேலைத்திட்டத்திற்கு நிதி உதவி வழங்கவும், இலங்கையின் தேவை அடிப்படையில் கடன்களை வழங்கவும் கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனம் இதன்போது இணக்கம் தெரிவித்தது.

இலங்கைக்கான கொரிய தூதுவர் மியோன் லீ, பிரதி தூதுவர் சோன்கய் ஜியோங், கொய்க்கா பணிப்பாளர் யுன்க்ஜின் கிம், பிரதி பணிப்பாளர்களான யோன்க்வன் கிம், யுன்சூ ஜியோன், டிமோவின் நிறைவேற்று அதிகாரி ரொஷான் சமரசிங்க மற்றும் இலங்கை புகையிரத திணைக்களத்தின் பிரதி நிறைவேற்று அதிகாரி பீ.எம்.யூ.எஸ். பன்னஹெக்க உள்ளிட்டோரும் இதன்போது கலந்துகொண்டனர். (அ)

# கொழும்பில் மனிதப் புதைகுழிகள் 2ஆம் கட்ட அகழ்வு பணி ஆரம்பம்!

கொழும்பு, செப். 28

கொழும்பில் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன்படி இங்குருகொட சந்தியில் இருந்து கொழும்பு துறைமுகத்திற்கு செல்லும் புதிய அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளுக்காக கடந்த ஜூலை மாதம் 13ஆம் திகதி மண் தோண்டும் போது மனித எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

இதனையடுத்து, முதலாம் கட்ட பணிகள் புதுக்கடை நீதவான் முன்னிலையில், கடந்த ஐந்தாம் திகதி புதைகுழி தோண்டும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும், குறித்த மனித புதைகுழியின் காலம் குறித்து இதுவரை எதுவும் ஊகிக்க முடியாது என பேராசிரியர் ராஜ் சோமதேவா சுட்டிக்காட்டியுள்ளதுடன் 1988 மற்றும் 89 காலப்பகுதிகளில் காணாமல் போனவர்கள் அங்கு புதைக்கப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வாழ்த்து

கொழும்பு, செப். 28

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அநுர குமார திசாநாயக்கவிற்கு, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வாழ்த்துச் தெரிவித்துள்ளார்.



அவர் தனது சமூக வலைத்தளத்தில் வாழ்த்துச் செய்தியை பதிவு செய்துள்ளார்.

"இலங்கை மக்கள் உங்களை சுதந்திரமான, நியாயமான மற்றும் அமைதியான தேர்தலில் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்துள்ளனர்."

அவர்கள் அதைப் பற்றி பெருமைப்படுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்து-பசிபிக் பிராந்தியத்தில் அமைதி, பாதுகாப்பு மற்றும் செழிப்புக்காக உங்களுடன் இணைந்து பணியாற்ற நான் எதிர்பார்க்கிறேன்" என்று அமெரிக்க ஜனாதிபதி பதிவிட்டுள்ளார். (அ)

# அரச குடியிருப்புகளை மீள ஒப்படைக்க முன்னாள் அமைச்சர்களுக்கு அறிவிப்பு

கொழும்பு, செப். 28

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் பயன்படுத்திய அனைத்து அரச குடியிருப்புகள் மற்றும் விடுதிகளை மீள ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கு பொது நிர்வாக அமைச்சானது எழுத்து மூலம் இதனை அறிவித்துள்ளது.

15 முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் ஏற்கனவே அரச குடியிருப்புகள் மற்றும் விடுதிகளை ஒப்படைப்பது குறித்து விசாரணை நடத்தியதாக அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பல நிறுவனங்களுக்குக் கொழும்பில் சுமார் 50 அரச விடுதிகள் வழங்கப்பட்டிருந்தன.

இதேவேளை, பொதுத் தேர்தல் நடைபெறும் திகதி வரை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாதிவெலையிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் குடியிருப்புகளை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், குறித்த குடியிருப்புக்களை பொதுத் தேர்தல் நடைபெறும் தினத்திலோ அல்லது அதற்கு மறுநாளோ ஒப்படைக்கவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேநேரம், பாராளுமன்றம் கலைக்கப்பட்டதையடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த முத்திரை கட்டணம் உள்ளிட்ட அனைத்து வகையான கொடுப்பனவுகளும், வசதிகளும் இரத்து செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு மக்கள் சரியானவர்களை பாராளுமன்றம் அனுப்ப வேண்டும்

## சட்டத்தரணி மனோஜ் நாணயக்கார

கொழும்பு, செப். 28

**ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் விஞ்ஞாபனத்தில் உள்ள விடயங்களை யதார்த்தமாக்க கூடிய தரப்பினர் பாராளுமன்றத்துக்கு வருகை தரவேண்டும் என "மக்களுக்காக நாளை" அமைப்பின் தலைவர் சட்டத்தரணி மனோஜ் நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதியும் பாராளுமன்ற உறுப்பினர்களும் மாற்றமடைந்தால் மாத்திரம் நாட்டில் மாற்றம் ஏற்பட்டுவிடப்போவதில்லை. 225 பாராளுமன்ற உறுப்பினர்களை மாற்ற வேண்டியது அவசியமான விடயமாகும். இருப்பினும் 220 இலட்சம் மக்கள் மாற்றம் அடைய வேண்டும். அதுவே முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும்.

ஆட்சியாளர்களை பார்க்கிலும் நாட்டு மக்களின் சிந்தனையிலேயே மாற்றம் ஏற்பட வேண்டும். அதேபோன்று வளமான நாடு அழகான வாழ்க்கை என்ற அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியின் விஞ்ஞாபனத்தில் உள்ள விடயங்கள் யதார்த்தமாக வேண்டும்.

அவ்வாறு யதார்த்தமாக வேண்டுமாயின் பாராளுமன்றத்திற்கு அதனை யதார்த்தமாக்க கூடிய தரப்பினர் வருகை தர வேண்டும். அதற்கான சந்தர்ப்பம் மக்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது-என்றார்.

(அ)

# எல்பிட்டி பிரதேச சபையின் தேர்தலில் வெற்றி பெறுவோம்

## நாமல் ராஜபக்ஷ சூளுரை



கொழும்பு, செப். 28

பாராளுமன்றத் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதே எமது இலக்காக இருக்கின்றது. பஸில் ராஜபக்ச நிச்சயம் நாட்டுக்கு வருவார் என்று பொது ஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

பொதுத்தேர்தலுக்கு தயாராகிவருகின்றோம். அதற்கு முன்னர் எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலை வெற்றிகொள்வதற்கு முயற்சிக்கின்றோம். புதியதொரு அரசியல் சக்தியை கட்டியெழுப்புவோம்.

கொள்கை ரீதியிலான முரண்பாடு காரணமாகவே ஐ.தே.கவுடனான கூட்டு முறிந்தது. இனியும் கூட்டணி சாத்தியம் வராது என்றே கருதுகின்றேன்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை பெறுவதே எமது இலக்கு.

அநுரவுக்கு 3 சதவீத வாக்கு தான் இருந்தது ,மக்கள் அவரை பிரபலமாக்கினர் என்பதை மறந்துவிடக்கூடாது. பஸில் ராஜபக்ஷ வருவதாகவே எமக்கு அறிவித்துள்ளார்-என்றார். (அ)

# ஜனாதிபதியின் திட்டங்கள் மிகவும் வரவேற்கத்தக்கவை

## காஞ்சன விஜேசேகர பாராட்டு

கொழும்பு, செப். 28

உர மானியம் அதிகரிப்பு உட்பட பல அரசாங்க முயற்சிகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது என முன்னாள் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

புத்துயிர் பெற்ற கொள்கைகளில் உர மானியத்தை 15,000 ரூபாயில் இருந்து 25,000 ரூபாயாக அதிகரிப்பது, மீனவர்களுக்கு எரிபொருள் மானியத்தை அறிமுகப்படுத்துவது போன்ற விடயங்கள் அடங்குமெனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கீழ் இந்த திட்டங்கள் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் விஜேசேகர தெரிவித்தார்.

ஆரம்பத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின்



அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்ட இந்தத் திட்டங்கள் ஜனாதிபதித் தேர்தலின் போது தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இடைநிறுத்தப்பட்டதாக விஜேசேகர சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பாக். பாராளுமன்ற சேவைகள் நிறுவகத்துக்கும் இலங்கை பாராளுமன்றுக்கும் இடையே ஒப்பந்தம்

கொழும்பு, செப். 28

இலங்கை பாராளுமன்றத்துக்கும் பாகிஸ்தான் பாராளுமன்ற சேவைகள் நிறுவகத்துக்கும் இடையில் ஜனநாயக விழுமியங்களை வலுப்படுத்துவதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களத்தினால் நேற்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற ஜனநாயக மரபுகளை வளர்ப்பதற்கும், சட்டவாக்க நிறுவனங்களுக்கிடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும் ஒரு முக்கியமான நடவடிக்கையாக, புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

அதற்கமைய, இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பாகிஸ்தான் பாராளுமன்ற சேவைகள் நிறுவகம் சார்பில் பாகிஸ்தானின் இலங்கைக்கான தூதுவர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் பாஹீமுல் அஸீஸ், பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர ஆகியோர் கையொப்பமிட்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற பணியாளர்களுக்கிடையில் அறிவைப் பகிந்துகொள்ளும் செயற்பாடுகள் ஊடாக ஜனநாயக விழுமியங்களை ஊக்குவித்தல் மற்றும் சட்டவாக்க நடைமுறைகளை வலுப்படுத்தல் என்பன இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கமாகும்.

ஒப்பந்தத்தை கையொப்பமிட்டதன் பின்னர் அதனை உயிர்ப்புடனும் செயற்பாட்டு ரீதியான கூட்டாக மாற்றுவது மிகவும் முக்கியமானது என பாகிஸ்தானின் இலங்கைக்கான தூதுவர் தெரிவித்தார்.

அத்துடன், இதனால் இரு நாடுகளினதும் சட்டவாக்க நிறுவனங்களுக்கிடையில் நிலவும் நெருக்கமான ஒத்துழைப்பு விருத்தியடையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர இலங்கை பாராளுமன்றத்தின் பணியாளர்களுக்கு பயிற்சி வாய்ப்புக்களை வழக்கும் போது இவ் ஒப்பந்தம் பயனுள்ளதாக அமையும் இதன்மூலம் சிறந்த நடைமுறைகளைக் கற்றுக்கொள்வதற்கும் விசேட நிபுணத்துவ அறிவைப் பெற்றுக்கொள்வதன் ஊடாக சட்டவாக்க செயன்முறைக்கு ஆதரவளிப்பதற்கு அவர்களுக்கு இயலும். அதற்கு மேலதிகமாக, இந்தக் கலந்துரையாடலின் போது இலங்கையின் அரசியலமைப்பு, மற்றும் பாராளுமன்றத்தின் பணிகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

(அ)

# நெற் செய்கையாளர்களுக்கான உர மானியம் ரூ. 10,000 உயர்வு!

கொழும்பு, செப். 28

பெரும்போகத்தில் நெற்செய்கையாளர்களுக்கு வழங்கப்படும் உர மானியத்தை 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்குமாறு ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க திறைசேரிக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதற்கமைய ஹெக்ரேயருக்கு இதுவரை வழங்கப்பட்ட 15 ஆயிரம் ரூபா கொடுப்பனவை 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு ஜனாதிபதியால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த தீர்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மானியம் விவசாயிகளுக்கு செயற்றிறனுடனும் திறம்படவும் கிடைக்கும் வகையில் அவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக வைப்பிலிடப்படுமென ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சரியான விவசாய இடுபொருள் முகாமைத்துவத்திற்காக நியாயமான விலையில் உரம் உள்ளிட்ட விவசாய இடுபொருட்களை வழங்குவதற்கும் சிறந்த விவசாய நடைமுறைகளுக்கேற்ப இரசாயன மற்றும் சேதனப் பசளை உள்ளிட்ட விவசாய இடுபொருட்களுக்கு மானியத்தை வழங்குவதற்கும் புதிய அரசாங்கத்தின் கொள்கை பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பின்னடைவை சந்தித்துள்ள மீன்பிடித் தொழிலை ஊக்குவித்து உற்பத்திச் செலவை குறைப்பதற்காக ஒக்டோபர் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மீனவர்களுக்கு எரிபொருள் மானியத்தை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஆழ்கடல் மற்றும் நாளாந்த படகுகளுக்கு மாதாந்த அடிப்படையில் எரிபொருள் மானியத்தை வழங்குமாறு ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவினால் திறைசேரிக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த கொடுப்பனவும் மீனவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக வைப்பிலிடப்படவுள்ளது.

மீன்பிடித் தொழிலை நிலைபேறான, சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வகையில் மேம்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், அதனூடாக மீன் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் நுகர்வோருக்கு நியாயமான விலை, மீன்பிடி தொழிலாளர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துதல் என்பன புதிய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக தற்போது கடும் பின்னடைவை சந்தித்து வரும் மீன்பிடித் தொழிலை முன்னேற்றுவதற்கு நிதி மற்றும் தொழிநுட்ப உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# கப்ராலை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு

கொழும்பு, செப். 28

கிரேக்க முறிகள் கொடுக்கல், வாங்கல் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்ட ஐவரை அடுத்த மாதம் 10 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க உத்தரவிட்டார்.

கடும் பொருளாதார நெருக்கடியை சந்தித்திருந்த போது கிரேக்க அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி பத்திரங்களை கொள்வனவு செய்தமையின் ஊடாக அரசாங்கத்திற்கு 184 கோடி ரூபாவுக்கும் அதிக நட்டத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதற்கு முன்னர் இந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு தொடரப்பட்டதுடன், ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தினால் குற்றப்பத்திரிகையில் கையெழுத்திடப்பட்ட தினம் தொடர்பில் முன்வைக்கப்பட்டிருந்த தொழினுட்ப கோளாறு காரணமாக பிரதிவாதிகள் விடுவிக்கப்பட்டனர்.

தொழினுட்ப கோளாறை நிவர்த்தி செய்து ஆணைக்குழுவினால் கடந்த ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி மீண்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதற்கமைய இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், முன்னாள் பிரதி முன்னாள் ஆளுநர் தர்மசேன தீரசிங்க, தொன் வசந்த ஆனந்த சில்வா, சந்த்ரசிறி ஜயசிங்க பண்டித சிறிவர்தன மற்றும் எம். ஏ. கருணாரத்ன ஆகியோரை மன்றில் முன்னிலையாகுமாறு தெரிவித்து நீதிமன்றத்தினால் இன்று அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(அ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஈழநாடு



# களுவாஞ்சிக்குடியில் பரவிய காட்டுத் தீ கட்டுப்பாட்டுக்குள்

## பொலிஸார் தீவிர விசாரணை





மட்டக்களப்பு, செப். 28

**மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏத்தாளைக்குளம் காட்டுப்பகுதியில் பரவிய தீ கட்டுப்படுத்தப்பட்டது. இந்த தீ பரவல் தற்செயலாக நடந்ததா? அல்லது திட்டமிட்ட செயல்பாடா? என்பது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.**

ஏத்தாளைக்குளம் மற்றும் அதனை அண்டிய பகுதியானது சுற்றுச்சூழல் பாதுகாப்பு வலயமாகவும் பறவைகள் சரணாலயமாகவும் இருந்து வருகிறது.

அந்தப் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தை தொடர்ந்து களுவாஞ்சிக்குடி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை உத்தியோகத்தர்கள் இணைந்து தீயை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதனால் தீ பரவுவது கட்டுப்படுத்தப்பட்டதோடு, பெரும் சேதம் தவிர்க்கப்பட்டது.

இந்த நிலையில், அந்தப் பகுதிக்குச் சென்ற வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களும் தீ விபத்து தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்த தீ பரவல் தற்செயலாக நடந்ததா? அல்லது திட்டமிட்ட செயல்பாடா? என்பது தொடர்பில் தகவல்கள் இதுவரை வெளியாகாத நிலையில், உண்மையைக் கண்டறியும் நோக்கில் களுவாஞ்சிக்குடி பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (எ)



# மல்லிகைத்தீவு மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்

சம்மாந்துறை, செப். 28

சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட மல்லிகைத்தீவு கிராம மாணவர்களுக்கு 23 துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பு செய்யப்பட்டன .

இந்த நிகழ்வு மல்லிகைத்தீவு அ. த. க. பாடசாலையின் அதிபர் எஸ். ஜதீஸ்வரா தலைமையில் நடைபெற்றது.

இதில், விருந்தினர்களாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி. பரமதயாளன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ. எல். நாஷீர் அலி, உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. ரி. சகாதேவ ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

மல்லிகைத்தீவு கிராமத்தில் இருந்து மல்வத்தை விபுலானந்தா மத்திய கல்லூரிக்கு மூன்று கிலோ மீற்றர் தினமும் நடந்து சென்று வந்த 23 மாணவர்களுக்கு அவர்களின் கல்விச் செயல்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில் இந்த 23 துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன. (எ)

# தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு

கல்முனை, செப். 28

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு அம்பாறையில் அனுஷ்டிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும் முன்னாள் தவிசாளருமான கி. ஜெயசிறில் தலைமையில் காரைதீவு அலுவலகத்தில் இந்த நினைவேந்தல் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் திலீபனின் உருவப்படத்துக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தியதுடன் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும் உணர்வுபூர்வமாக கலந்துகொண்டனர்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும், சிறைகளிலும், முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும், அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும், ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்பட வேண்டும், தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என ஐந்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து 15. 09.1987 தொடக்கம் 26. 09. 1987 வரையான 12 நாட்கள் அகிம்சை வழியில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு சாவைத் தழுவியவர் தியாகி திலீபன் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)






# பத்திரகாளி அம்பாள் ஆலய பால்குடபவனி





சம்மாந்துறை, செப். 28

வரலாற்று பிரசித்தி பெற்ற சம்மாந்துறை சிறீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த தீ மிதிப்பு சடங்கு வைபவத்தின் பால்குடபவனி நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

சிறீ கோரக்கர் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து பால்குடபவனி ஆரம்பமானது.

தீ மிதிப்பு சடங்கு கடந்த 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கதவு திறத்தலுடன் ஆரம்பமாகியது.

தொடர்ச்சியாக 10 தினங்கள் இந்தச் சடங்கு நடைபெற்று, ஒக்ரோபர் மாதம் 03 ஆம் திகதி தீ மிதிப்பு வைபவம் நிறைவுபெறவுள்ளது.

சம்மாந்துறை சிறீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் மற்றும் காரைதீவு பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் பிரதம பூசகர் குமாரகுலசிங்கம் லோகேஷ் தலைமையில் தீ மிதிப்பு சடங்கு நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 03 ஆம் திகதி காலை 6 மணிக்கு மஞ்சள் குளிக்கும் நிகழ்வு இடம்பெற்று தீ மிதிப்பு வைபவம் நடைபெறவுள்ளது. (எ)

# சிறந்த கிரிக்கெட் அணி விருது கல்முனை ஸாஹிரா கல்லூரிக்கு




கல்முனை, செப். 28

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சம்மேளனம் சிறீ லங்கா கிரிக்கெட் நிறுவனத்துடன் இணைந்து ஒழுங்கு செய்த இலங்கையில் கிரிக்கெட் துறையில் பிரகாசிக்கும் பாடசாலைகளை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பு, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.


இதன்போது, கிழக்கு மாகாணத்தில் 19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான சிறந்த கிரிக்கெட் அணி விருது கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி அணிக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இதன்போது, கல்லூரி அதிபர் எம். ஐ. ஜாபிர், கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் ஏ. எம். அப்ராஜ் றிலா, விளையாட்டு பொறுப்பாசிரியர் எம். ஐ. எம். அமீர், கிரிக்கெட் அணி மாணவப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு விருதைப் பெற்றுக் கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு நாட்களில் 700 பேரை கொன்று குவித்தது இஸ்ரேல்

## ஹிஸ்புல்லா ட்ரோன் பிரிவு தலைவரும் பலி!



**பெய்ரூட், செப். 28**

**லெபனான் மீது இஸ்ரேல் நடத்திவரும் தொடர் தாக்குதலில் ஹிஸ்புல்லாக்களின் ட்ரோன் படைப் பிரிவு தலைவர் ஹூசைன் சிரோர் சுட்டுக் கொல்லப்பட்டதாக அந்த அமைப்பு உறுதிப்படுத்தியது. இதேவேளை, கடந்த திங்கள் முதல் வியாழக்கிழமை வரையான நான்கு நாட்களில் மட்டும் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 700இற்கும் அதிகமான பொதுமக்கள் கொன்று குவிக்கப்பட்டதாக உறுதியான தகவல்கள் வெளியாகியுள்ளன.**

கடந்த 2006ஆம் ஆண்டுக்குப் பிறகு மிகப்பெரிய தாக்குதல் நடவடிக்கையாக இஸ்ரேல் இராணுவம் கடந்த திங்கட்கிழமை லெபனானின் தெற்கு பகுதி நகரங்கள் மீது குண்டு மழை பொழிந்தது.

இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை தொடங்கி 4 நாட்களில் இஸ்ரேல், லெபனான் மீது நடத்திய தாக்குதலில் 700இற்கும் அதிகமானோர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் வியாழக்கிழமை மட்டும் 92 பேர் பலியாகினர்.

இஸ்ரேல் காஸாவில் தொடங்கி தனது தாக்குதல் எல்லைகளை விரிவுபடுத்தி மத்திய கிழக்கு நாடுகளில் மிகப்பெரிய போர் பதற்றத்தை உருவாக்கியுள்ளதாக உலக நாடுகள் பல கண்டனங்களைப் பதிவு செய்து வருகின்றன. போர் நிறுத்தத்தையும் வலியுறுத்தி வருகின்றன.

ஆனால், போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூறியுள்ள இஸ்ரேல் பிரதமர் அலுவலகம், "ஹிஸ்புல்லாக்களை அழித்தொழிக்கும் வரை தாக்குதல் தொடரும்" எனத் தெரிவித்துள்ளது. (எ)

# போர் நிறுத்தம் பற்றிய செய்தி உண்மையில்லை

## இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் மறுப்பு

ஜெருசலேம், செப். 28

ஹிஸ்புல்லா அமைப்பினரை இலக்கு வைத்து லெபனான் மீது வான்வழித் தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேல் போர் நிறுத்தம் மேற்கொள்ளவுள்ளதாக தகவல் வெளியான நிலையில் "இது உண்மை இல்லை - அதற்கு வாய்ப்பில்லை" என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

கடந்த நான்கு நாட்களாக லெபனான் மீது கொடூரத் தாக்குதலை முன்னெடுத்துள்ளது இஸ்ரேல். தற்போது, தரைவழித் தாக்குதலும் நடத்த வாய்ப்பிருப்பதாக எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனால் மக்கள் தங்களின் இருப்பிடத்தை விட்டு செல்ல மனமில்லாமல் லெபனான் தலைநகர் நோக்கி வெளியேறி வருகின்றனர். இந்த இக்கட்டான நிலையில், வழக்கம் போலவே "போர் நிறுத்தம் வேண்டும்" என்ற கோரிக்கையை அமெரிக்கா, பிரான்ஸ், கனடா, அவுஸ்திரேலியா, ஜப்பான், கட்டார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகள் முன்வைத்துள்ளன. அதாவது, லெபனானில் 21 நாட்கள் போர் நிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்தன. ஆனால், இஸ்ரேல் பிரதமர் இது குறித்து எந்தவித கருத்தும் தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில், போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற வகையில் கூறியுள்ள இஸ்ரேல் பிரதமர் அலுவலகம், "போர் நிறுத்தம் பற்றிய செய்தி உண்மையில்லை" எனத் தெரிவித்துள்ளது. இஸ்ரேலின் வெளிவிவகார அமைச்சர் காட்ஸ் லெபனானில் போர் நிறுத்தத்துக்கான முன்மொழிவுகளை நிராகரித்தார். அதாவது, லெபனான் மீது தாக்குதல் நடத்தப்படும் என இஸ்ரேல் வெளிப்படையாக தெரிவித்துள்ளது. லெபனான் மீது கடந்த நான்கு நாட்களில் இஸ்ரேல் நடத்தியத் தாக்குதலில் இறந்தவர்களின் எண்ணிக்கை 700-ஐ தாண்டியது. சுமார் 5, 00, 000 மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# "உக்ரைனிய குழந்தைகளை நாம் பாதுகாக்க வேண்டும்"

வாஷிங்டன், செப். 28

உக்ரைனிய குடும்பங்கள், உக்ரைனிய குழந்தைகளை புடினின் தீமைகளிலிருந்து நாம் பாதுகாக்க வேண்டும்- என்று அந்த நாட்டின் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்தார்.



உக்ரைன் ஜனாதிபதி, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸை சந்தித்து ரஷ்யாவுடனான போரில், உக்ரைனின் வெற்றித் திட்டம் குறித்து விவாதித்தார். அப்போது, உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கி வரும் ஆதரவுக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

இது குறித்து ஜெலென்ஸ்கி தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுனான சந்திப்பின் போது உக்ரைனின் வெற்றித் திட்டத்தை பற்றி விவாதித்தேன். அந்தத் திட்டத்தை மேலும் வலுப்படுத்துவது, எங்களின் நிலைப்பாடுகளின் ஒருங்கிணைப்பு, பார்வைகள், அணுகுமுறைகள் பற்றி நாங்கள் விவாதித்தோம். மேலும் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கும் படி நாங்கள் பணித்துள்ளோம்.

ரஷ்ய படையெடுப்பின் ஆரம்பத்தில் இருந்தே அமெரிக்கா உக்ரைனுடன் ஒன்றாக நின்றதை நாங்கள் வெகுவாக பாராட்டுகிறோம். எங்களின் வெற்றியில் உங்களின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாதது." என்று குறிப்பிட்டுள்ளார்.

"நாம் இந்த போரை முடிவுக்குக் கொண்டு வந்து அமைதியை ஏற்படுத்த வேண்டும். உக்ரைனிய குடும்பங்கள், உக்ரைனிய குழந்தைகளை புடினின் தீமைகளிலிருந்து நாம் பாதுகாக்க வேண்டும். இந்த இக்கட்டான சூழ்நிலையில் உக்ரைனுடன் அமெரிக்கா துணை நிற்பதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றும் ஜெலென்ஸ்கி கூறினார்.

"ரஷ்யாவுடனான போரில் உக்ரைனின் நிலைப்பாட்டை வலுப்படுத்துவது குறித்தும், முன்பை விட உக்ரைனை மேலும் உறுதியாக்குவது குறித்தும் உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கியுடன் மீண்டும் விவாதித்தேன். இரண்டு விடயங்கள் உறுதியாக உள்ளன. ஒன்று உக்ரைன் இந்தப் போரில் உறுதியாக வெற்றி பெறும். போரின் பாதையின் ஒவ்வொரு நிலையிலும் அமெரிக்கா தொடர்ந்து அவர்களுக்கு ஆதரவு வழங்கும்." என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அமெரிக்கா உக்ரைனுக்கு புதிதாக இராணுவத் தளபாடங்கள் மற்றும் 8 மில்லியன் அமெரிக்க டொலர் உதவிகளை வழங்கிய நிலையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. (எ)

# அணு ஆயுதங்களை பயன்படுத்த ரஷ்யா ஒருபோதும் தயங்காது!

## ஐரோப்பிய நாடுகளுக்கு புடின் எச்சரிக்கை

மொஸ்கோ, செப். 28

உக்ரைனைப் பயன்படுத்தி ரஷ்யா மீது தீவிர தாக்குதல் நடத்தப்படுமானால், அணு ஆயுதங்களைப் பயன்படுத்த ரஷ்யா ஒருபோதும் தயங்காது என்று ஐரோப்பிய நாடுகளுக்கு அந்த நாட்டின் ஜனாதிபதி விளாடிமிர் புடின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் போர் இரண்டரை ஆண்டுகளைக் கடந்து நடந்து வருகிறது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்கு பொருளாதார உதவிகளை வழங்கி வருகின்றன.

இந்த நிலையில், தீவிர ஏவுகணைத் தாக்குதல்களை ரஷ்யாவுக்கு எதிராக தொடுக்க உக்ரைனுக்கு அனுமதி வழங்கலாமா என்பது குறித்து அமெரிக்கா மற்றும் பிரிட்டனில் ஆலோசனை நடந்ததாகக் கூறப்படுகிறது. அதிக பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய ஏராளமான ஏவுகணைகள் உக்ரைனுக்கு வழங்கப்பட்டிருப்பதை இது உறுதிப்படுத்துவதாகவுள்ளது.

இது தொடர்பில் புடின் வெளியிட்டுள்ள எச்சரிக்கையில், "அணு ஆயுதமற்ற ஒரு நாடு (உக்ரைன்), அணு ஆயுத நாடுகளோடு சேர்ந்து ரஷ்யாவுக்கு எதிராக தீவிர ஆக்கிரமிப்பு முயற்சிகளை மேற்கொள்ளுமானால், இதனை ரஷ்யாவுக்கு எதிரான அணு ஆயுத நாடுகளின் தாக்குதலாகவே ரஷ்யா கருதும். அத்தகைய ஒரு சூழல் ஏற்படுமானால், அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதில் ரஷ்யா பின்பற்றி வரும் கொள்கை மாற்றத்துக்கு உள்ளாகும். இதில் எந்த சந்தேகமும் இல்லை" என தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் உக்ரைன் மட்டுமல்லாது, அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும் புடின் அணு ஆயுத எச்சரிக்கை விடுத்துள்ளார். ரஷ்யா அணு ஆயுத தாக்குதல் நடத்துமானால் அதற்கு உத்தரவு பிறப்பிக்கும் தலைமை இடத்தில் விளாடிமிர் புடின் இருக்கிறார். அவர் உத்தரவிட்டால் ரஷ்ய இராணுவம் அணு ஆயுத தாக்குதல்களை நடத்தும். இந்த நிலையில், உலகின் மிகப் பெரிய அணு ஆயுத நாடுகளில் ஒன்றான ரஷ்யாவின் இந்த அறிவிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது. (எ)

# "ஷேக் ஹசீனாவை நாடு கடத்த வேண்டும்"

நியூயோர்க், செப். 28

பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவை நாடு கடத்த வேண்டும் என்று அந்த நாட்டின் இடைக்கால அரசின் தலைமை ஆலோசகரான பேராசிரியர் முகமது யூனுஸ் தெரிவித்தார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமைந்துள்ள ஐ. நா. பொதுச்சபை கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக முகமது யூனுஸ் சென்றுள்ளார். அப்போது அவரிடம் செய்தியாளர்கள் சில கேள்விகளை கேட்டனர். இதன்படி, பிரதமர் பதவிக்கு போட்டியிட ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறீர்களா? என கேட்டதற்கு நான் அப்படி தெரிகிறேனா? என பதிலுக்கு கேட்டார்.

மேலும், பங்களாதேஷில் தேர்தல் நடத்துவதற்கு கால அளவு எதுவும் தன்னிடம் இல்லை எனக் கூறியதுடன், இதற்காக பல்வேறு ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவர்கள் அடுத்து வரும் மாதங்களில் சீர்திருத்தத்துக்கான பரிந்துரைகளை வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன்பின்பு, நாட்டில் தேர்தலுக்கான திகதி முடிவு செய்யப்படும்.

தற்போது இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா, ஏதேனும் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருக்கிறார் என்றால், அவரை நாடு கடத்த வேண்டும். நீதியின் முன் அவரை கொண்டுவர வேண்டும் என்றும் முகமது யூனுஸ் கூறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் நிகழ்வுகளுக்கு அரசியல்வாதிகளை அழைக்காதீர்!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய பணிப்பு

கொழும்பு, செப். 28

அரசியல்வாதிகளைப் பாடசாலை நிகழ்வுகளுக்காக அழைப்பதை நிறுத்துமாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய பணிப்புரை விடுத்துள்ளார்.

கல்வி அமைச்சின் சகல பிரிவு பிரதானிகளுடனும் இடம் பெற்ற கலந்துரையாடலில் பிரதமர் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

மேலும் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் வெளியானமை தொடர்பில் சுயாதீன விசேட நிபுணர்களின் ஒத்துழைப்புடன் விசாரணைகளை நடத்தி தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

வினாத்தாள் வெளியானதன் காரணமாக மாணவர்களுக்கு ஏற்பட்ட அநீதிக்கு விரைவில் நியாயம் கிடைக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இதுவரை தாமத மான சகல பரீட்சைகளினதும் பெறுபேறுகளை விரைவில் வெளியிடுமாறும் அவர் பரீட்சைகள் திணைக்களத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.



# பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய நியமனம்

கொழும்பு, செப். 28

சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் பொலிஸ் மா அதிபராக கடமையாற்றிய தேசபந்து தென்னக்கோன், அந்தப் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதிலிருந்து நீதிமன்றத்தால் இடைநிறுத்தப்பட்டதையடுத்து, பொலிஸ் மா அதிபர் பதவி வெற்றிடமாக இருந்தது.

இந்நிலையிலேயே சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய அந்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

# பழைய முறையில் விஸா!

கொழும்பு, செப். 28

பழைய முறைப்படி விசா வழங்கும் நடைமுறை நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்துள்ளது.

விஸா வழங்கும் நடைமுறை தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டமையால் குளறுபடிகள் ஏற்பட்டிருந்தன. இதனை அடுத்து அந்தச் செய்முறையை இரத்து செய்ய உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனால் விஸா வழங்கலில் தாமதம் ஏற்பட்டிருந்த நிலையில், பழைய முறைப்படி விஸா வழங்கும் நடைமுறை நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்துள்ளது. (அ)

# வட மாகாண புதிய ஆளுநருக்கு சர்வதேச இந்துமத பீடம் வாழ்த்து

யாழ்ப்பாணம், செப். 28

92ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க முன்னாள் அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகத்துக்கு ஆளுநர் நியமனத்தை வழங்கி உள்ளார். இதனை முன்னிட்டு வட மாகாண ஆளுநருக்கு சர்வதேச இந்து மத பீடம் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவிப்பதாக அதன் செயலாளர் கலாநிதி சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்துள்ளார்.

அரசாங்க அதிபராக அவர் பதவி வகித்த காலத்தில் மிகுந்த நேர்மையாகவும் மக்களுக்காக அர்ப்பணிப்புடனுமான சேவையிலும் ஈடுபட்டவர் என்பது தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் தெரிந்த விடயம். அவரது அந்த உண்மையான உழைப்புக்கும் நேர்மைக்கும் இந்த ஆளுநர் பதவி கிடைத்தது என்று சொன்னால் அது மிகையாகாது. அவரது சேவை தொடர எல்லாம் வல்ல இறைவன் அருள் புரியவேண்டும் என்று அந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டு மூடப்பட்டிருந்த வீதிகள் மக்கள் பாவனைக்கு!

கொழும்பு, செப். 28

சேர் பாரோன் ஜயதிலக்க மாவத்தை, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகையை அண்மித்த பகுதியில் இதுவரை வீதித் தடைகளால் மூடப்பட்டிருந்த வீதிகளை மக்கள் பாவனைக்காக திறந்து வைக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையும் அதனைச் சூழவுள்ள பகுதிகளும் இதுவரை உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டு மூடப்பட்டிருந்தன.



ஆனால் அநுரகுமார திசாநாயக்க, ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் அந்த அனைத்து வீதித் தடைகளும் அகற்றப்பட்டு பல வருடங்களின் பின்னர் அப்பகுதியிலுள்ள வீதிகள் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளன.

அதன்படி, ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக உள்ள சேர் பாரோன் ஜயதிலக்க மாவத்தை மற்றும் ஜனாதிபதி மாவத்தை ஆகியனவே பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கொழும்பு நகர போக்குவரத்து பிரிவின் பணிப்பாளர் கமல் புஷ்பகுமார இது குறித்து ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து வெளியிட்டார். ஜனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம் இவ்விரு வீதிகளும் இன்று முதல் பொதுமக்களுக்காக திறக்கப்பட்டுள்ளன. இதனால் பாரிய பிரச்னையாக காணப்பட்ட போக்குவரத்து நெரிசல் தவிர்க்கப்பட்டுள்ளது.

# தேசிய மக்கள் சக்தி அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார்!

## சி.பி.ரத்நாயக்க அறிவிப்பு

கொழும்பு, செப். 28

தேசிய மக்கள் சக்தியின் ஆரோக்கியமான திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளதாக சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.பி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பிளவுக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே காரணமாவார். எமது கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் ரணிலுக்கு ஆதவாக பிரசாரங்களில் ஈடுபட்டனர். எனினும் எமது வேட்பாளர் குறுகிய காலத்தில் சவால்களை ஏற்றுக் கொண்டு செயற்பட்டார். தற்போது நாட்டு மக்களின் தலைவராக அநுர குமார திசாநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளார். அரசியலமைப்பில் மாற்றம், நிறைவேற்று அதிகார முறைமை நீக்கம் போன்ற ஆரோக்கியமான திட்டங்களுக்கு நாம் அவருக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்.

நாட்டின் 75 வருட சாபத்தை நீக்குவதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அவ்வாறு சிறந்த மாற்றங்கள் இடம்பெறுமாயின் அவற்றை நாம் வரவேற்போம். எதிர்வரும் பொதுத் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்பது குறித்த கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன. அது குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகும்-என்றார். (அ)

# மன்னாரில் புதிதாக திறக்கப்பட்ட மது விற்பனை நிலையத்தை மூடுக!

## ஜனாதிபதியிடம் ரிஷாத் கோரிக்கை

மன்னார், செப். 28

மன்னார் பிரதான வீதியில் புதிதாக திறக்கப்பட்ட மது விற்பனை நிலைய அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்யுமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்குக் கடிதமொன்றை அனுப்பி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் இந்தக் கோரிக்கையினை முன்வைத்துள்ளார்.

குறித்த மதுபானச்சாலை பாடசாலை, ஆடைத் தொழிற்சாலைகள் மற்றும் மக்கள் குடியிருப்புக்கு அருகில் அமைந்துள்ளதாகவும், இந்த விடயம் தொடர்பில் கடந்த மாதம் போராட்டமொன்று முன்னெடுக்கப்படுவதாகவும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# பெரும்போகத்துக்கான பெரிய வெங்காயச் செய்கை ஆரம்பம்

கொழும்பு, செப். 28

இந்த ஆண்டு பெரும்போகத்துக்கான பெரிய வெங்காயச் செய்கை மாத்தளை மற்றும் அநுராதபுர மாவட்டங்களில் சுமார் ஆயிரத்து 500 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்போது, விவசாயிகளிடமிருந்து உரிய விலையில் வெங்காயம் கொள்வனவு செய்யப்படும் எனவும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

விவசாயத் திணைக்களத்தின் வெங்காய ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் பயிர்ச்செய்கைக்கு பொருத்தமான புதிய பகுதிகள் இனங்காணப்பட்டுள்ளதாகவும், 2025 ஆம் ஆண்டு சிறுபோகத்தில் இரண்டாயிரம் ஹெக்ரேயருக்கும் அதிகமான நிலப்பரப்பில் பெரிய வெங்காயத்தினை பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# மானிப்பாய் இந்துவின் முத்தமிழ் விழா நேற்று

யாழ்ப்பாணம், செப். 28

யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரியின் தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் முத்தமிழ் விழா நடத்தப்பட்டது,

கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன.

பாடசாலையின் அதிபர் துரைரட்ணம் திலீப்குமார் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் எஸ். சிறீ சற்குணராஜா கலந்து கொண்டார்.

நிகழ்வில் மருதடி விநாயகர் ஆலயத்திலிருந்து கல்லூரி வரை முத்தமிழ் விழாப் பவனி நடைபெற்றது. தொடர்ந்து சுவாமி விபுலாநந்தரின் திருவுருவச்சிலை திறந்து வைக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றல், இறைவணக்கம், முத்தமிழ் கீதத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நிகழ்வின்போது சங்கத் தமிழ்ச்சாரல் சஞ்சிகையும் வெளியிடப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படையினரால்...

நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வடமாகாணத்தில் புதிய அழகக சங்கங்களை அமைப்பதற்கு உள்ளூராட்சி திணைக்களம் அனுமதி தரவேண்டும் எனவும் தெரிவித்தனர்.

புதிதாக பொறுப்பேற்றுள்ள ஜனாதிபதி தமிழ் மக்களின் நீண்ட கால பிரச்சனைகளையும் தீர்க்கவேண்டும்- என்றனர். (அ)

## ஒரே சின்னத்தின்...

உறுப்பினர் ஆஷூ மாரசிங்க, "பொதுத் தேர்தலில் ஒன்றிணைந்து போட்டியி டுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியுடனான பேச்சுகள் சாதகமான நிலையில் உள்ளன" - என்றார்.

இதேபோன்று, "ஒரே குழுவாக தேர் தலை நடத்த வேண்டும் என்ற கோரிக்கை உறுதியானது. எனினும், கட்சி மற்றும் சின்னம் எதிர்காலத்தில் தீர்மானிக்கப் படும்", என்று எஸ். பி திஸநாயக்க கூறினார்.

இந்த சந்திப்பில் முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையிலான பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர் கள், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன உள் ளிட்ட முக்கியஸ்தர்களும் பங்கேற்றனர். (ஐ)

## நாணய நிதிய...

மீள் பேச்சுகளை முன்னெடுப்பதா என்பதை நிதி அமைச்சே தீர்மானிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய வங்கியில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"கடன் நிலைபேறுதன்மையை மறு ஆய்வு செய்வதா இல்லையா என்பதை நிதியமைச்சே தீர்மானிக்க வேண்டும். தற்போதுள்ள கடன் நிலைபேறுதன் மையின் மறு ஆய்வை அவ்வாறே முன்னெடுத்து, கடன் மறுசீரமைப்பை செய்வதா அல்லது புதிதாக கடன் நிலை பேறுதன்மை மறு ஆய்வை முன்னெ டுத்து மீள் பேச்சுகளை முன்னெடுப்பதா என்பதையும் நிதி அமைச்சே தீர்மானிக்க வேண்டும்.

தற்போது வரையான வேலைத்திட் டங்கள் அநேகமாக நிறைவடைந் துள்ளன. அத்துடன் மிக விரைவாக நாணய நிதியத்துடனான கடன் மறுசீரமைப்பை நிறைவு செய்து விரைவாக மூன்றாம் கட்ட கடன் மறுசீரமைப்பை நிறைவு செய்வோம் என்ற தகவலை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு வழங்கியுள்ளது.

அதற்கமைய, அதனை எவ்வாறு செய்யப்போகிறார்கள் என்று கலந்துரையாடி அரசாங்கம் தீர்மானம் எடுக்கும். மத்திய வங்கியினால் அதனை குறிப்பிட முடியாது.

உடன்படிக்கை பரிந்துரைகளில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது. தற்போதுள்ள கடன் நிலைபேறுதன்மை மறு ஆய்வின் அடிப்படையிலேயே இந்த இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது. அதனால், அதில் எந்த சிக்கலும் ஏற்ப டாது என்று நம்புகிறோம்.

தற்போது நடைமுறையிலுள்ள வேலைத்திட்டங்களை அவ்வாறே முன்னெடுத்துச் செல்வதென்று அரசாங்கம் தீர்மானித்தால், மேற்குறிப் பிட்ட திட்டங்களின் அடிப்படையில் தொடர்ந்தும் பயணிக்க முடியும்.

அவர்களால் வழங்கப்பட்ட நிவார ணம் மற்றும் எமது தரப்பிலிருந்து வழங்கப்பட்ட நிவாரணம் என்பவற் றுக்கு இடையில் பொருத்தம் இருக்கிறது என்ற தீர்மானத்தை விரைவாக பெற்றுக்கொள்ளவேண்டும். அதன் பின்னர் ஆறு மாதங்களில் முதலீட் டாளர்களுக்கு அழைப்பு விடுக்கவும் பிணை பரிமாற்றம் செய்யவும் முடியும்"- என்றார். (அ)

## பெரமுனவிலி...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்து அவருடன் இணைந்த மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளுக்கே அவர் மேற்கண்ட அழைப்பை விடுத்துள்ளார்.

அடுத்த பொதுத் தேர்தலுக்காக கட்சியை சீரமைத்து, திறமையான இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்குவதற்கான பணிகள் மேற்கொள் ளப்படும் - என்றும் அவர் இதன்போது குறிப்பிட்டார். (ஐ)

## சிறந்த எம். பி...

அமர்வுகளில் சிறப்பாக செயல்பட்ட உறுப்பினர்களின் தரவரிசையை மந்திரி (www.manthri.lk) என்ற இணையத்தளம் வெளியிட்டது.

தரவிசை அடிப்படையில் முதலி டத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ பெற்றார். இதில், 12ஆவது இடத்தை சிறீதரன் பெற்றார். 52 தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களில் இவரே முதல் 15 இடங்களில் இடம்பெற்றுள்ளார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான சி. சிறீத ரன் 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்த லில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட் டத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி யின் சார்பில் போட்டியிட்டு தெரிவா னார். இவர் கடந்த 2010ஆம் ஆண்டு முதல் பாராளுமன்ற உறுப்பினராக செயல்பட்டு வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐ. தே. க...

கொண்டவர்களை இணைத்து பரந்த கூட்டணி ஒன்றை அமைப்பதற்கே முயற் சிக்கிறோம் இவ்வாறு முன்னாள் அமைச் சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நவம்பரில் நடைபெறவுள்ள பாராளு மன்றத் தேர்தல் கூட்டணி தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஜனாதிபதித் தேர்தலில் மக் கள் மாற்றம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று வாக்களித்து புதிய ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்திருக்கின்றனர். தொடர்ந்து ஒரே தரப்பினர் அதிகாரத் தில் இருப்பதைவிட இவ்வாறு மாற்றம் ஏற்படுவது நல்லது. அதனால், மக்கள் ஆணைக்கு நாங்கள் மதிப்பளிக்கிறோம். எண்ணைப் பொறுத்தவரை நான் 40 வருடங்களாக அரசியலில் இருந்து வருகி றேன். அதனால் நாங்கள் எதிர்க்கட்சியி லும் இருந்துள்ளோம். ஜனாதிபதி மக்க ளுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறை வேற்ற வேண்டியிருக்கிறது. அதனை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்த லில் ரணில் விக்கிரமசிங்க போட்டியி டுவதில்லை என அறிவித்திருக்கிறார். அதனால் அவரை பிரதமர் வேட்பாளராக் குவது தொடர்பில் நாங்கள் அவருடன் கலந்துரையாடவில்லை. என்றாலும் சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்கள் சிறீ லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் இடதுசாரி கொள்கையுடைய கட்சிகளை இணைத் துக்கொண்டு பரந்துபட்ட கூட்டணி அமைத்துத் தேர்தலில் போட்டியிடுவ தற்கே கலந்துரையாடி வருகிறோம்.

இதேநேரம் ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசிய கட்சியும் தேர்தலில் இணைந்து போட்டியிடுவது தொடர் பில் கலந்துரையாடி வருகின்றன. அந்த கலந்துரையாடல்களில் நாங்கள் இல்லை. அவர்கள் இரண்டு தரப்பினரும் ஒன்றாக இருந்தவர்கள். அதனால் அவர்கள் ஒன்றாக இணைந்துபோட்டியிடலாம். ஐக்கிய மக்கள் சக்தி என்பது தாராளவாத முதலாளித்துவ கொள்கையுடைய கட்சி. அதனால் அந்தக் கட்சியுடன் எங்களுக்கு இணைந்து செயல்பட முடியாது. எம்முடன் இணைந்து செயல்படக்கூடிய வர்களுடனேயே நாம் பேசுகிறோம் - என்றார். (ஐ)

# தனித்து போட்டியிட சொல்பவர்கள் கட்சியை சிதைப்பதற்கு வந்தவர்கள்

## தமிழ் அரசின் சிறீநேசன் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, செப். 28

"எதிர்வரும் பாராளுமன்றத் தேர்த லில் தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்றி ணைந்து ஒரு கூட்டமைப்பாக போட்டி யிடுவதை நாங்கள் விரும்புகின்றோம். இதுவே மக்களின் விருப்பமுமாகும்- இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறீநேசன் தெரிவித்தார்.

தனித்து போட்டியிட வேண்டும் என்று சொல்கின்றவர்கள் கட்சியை வளர்ப்பதற்குரிய நோக்கமுடையவர் களாக இருக்க மாட்டார்கள் - மாறாக கட்சியை சிதைப்பதற்குரிய நோக்கமு டையவர்களாகத்தான் இருப்பார்கள் என்றும் அவர் கூறினார்.

மட்டக்களப்பில் நேற்று வெள்ளிக் கிழமை காலை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

மேலும் "தமிழர்கள் ஒற்றுமையாக, தமிழ்த் தேசிய கட்சிகள் ஓரணியில் ஒரு கட்சியாக தேர்தலுக்கு முகங்கொடுக்க வேண்டும் என்ற கருத்தை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா சொல்லியிருக்கின்றார்.

உள்ளூராட்சி தேர்தலில் மாத்திரம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருக்கும் கட்சிகள் தனித் தனியாக போட்டியிட்ட பின்னர் இணைகின்ற பட்சத்தில் அதிகமான சபை ஆசனங்களை பெற முடியும் என்றும் இதன் மூலமாக தேசிய கட்சிகளை இணைத்துக் கொள்ளாமல், தமிழ்த் தேசிய கட்சிகளை மாத்திரம் இணைத்துக் கொண்டு இந்த சபைகளை கைப்பற்றி பலமாக கொண்டு செல்ல லாம் எனச் செல்லப்பட்டது.

உள்ளூராட்சி தேர்தலுக்கு மட்டும் தான் இந்த நடைமுறை சொல்லப்பட் டது. ஏனைய மாகாண சபை தேர்தலி லும் பாராளுமன்றத் தேர்தலிலும் கூட்ட மைப்பாக ஒன்றிணைந்து போட்டியிடு வதுதான் தமிழ்த் தேசிய கட்சிகளின் விருப்பம்."- என்றார்.(எ)

# பொதுத் தேர்தலிலும் வெற்றி எமதே!

## தேசிய மக்கள் சக்தி திட்டவட்டம்

கொழும்பு, செப். 28

பொதுத்தேர்தலில் பாராளுமன்றத் தில் பெரும்பான்மையைக் கைப்பற்று வதற்கு எதிரணிகள் வியூகம் வகுத்து வரும் நிலையில், அதற்குரிய ஆணையை மக்கள் வழங்கமாட்டார்கள் என்று தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தின் அதிகாரத்தையும் தேசிய மக்கள் சக்திக்கே மக்கள் வழங்குவார்கள் என்று அக்கட்சியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரான சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு- "ஜனாதிபதி தேர்தலில் நாம் வென்று விட்டோம். தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற் றுவதற்கு பாராளுமன்றத்தின் அதிகாரமும் தேவை. எனவே, எவ்வித ஐயமும் இன்றி அதற்குரிய ஆணையை மக்கள் எமக்கு வழங்குவார்கள் என்பது உறுதி. எதிரணிகள் எப்படிதான் உளறினாலும் மக்கள் எமது பக்கமே நிற்கின்றனர்." - என்றார். (அ)

## இலத்திரனியல்...

மேன்முறையீட்டு நீதிமன்றம், ஒக் ரோபர் முதலாம் திகதி வரை அமுலுக்கு வரும் வகையில் இடைக்கால தடையுத் தரவு பிறப்பித்தது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி முகமது லஃபர் தாஹிர், உண்மைகளை பரிசீலித்து, அரசாங்கத்தின் முறையான கொள்முதல் நடைமுறைகளை பின்பற் றாமல் சட்டத்திற்கு முரணான வகையில் இந்த மின் கடவுச்சீட்டு கையிருப்பை வாங்க முடிவு செய்யப்பட்டு வெளி யிடப்பட்டது என்று சுட்டிக்காட்டினார்.

'எபிக் லங்கா' பிரைவட் லிமிடெட் தாக்கல் செய்த இந்த ரிட் மனுவில், பாதுகாப்பு அமைச்சர் மற்றும் சிலர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள் ளனர்.

50 இலட்சம் மின் கடவுச்சீட்டுகளை வழங்குவதற்கான கேள்விகோரல் நடை முறையை மீறி செப்ரெம்பர் 2 ஆம் திகதி இரண்டு தனியார் நிறுவனங்களுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்ததாகவும், அதன் ஒரு பகுதியாக, இரண்டு நிறுவனங்களிடமிருந்து 7 இலட்சத்து 50 ஆயிரம் மின் கடவுச்சீட்டுகளை வாங்குவதற்கு ஒப்புதல் அளித்ததாகவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

மனு தொடர்பாக முன்வைக்கப்பட்ட உண்மைகளை பரிசீலித்த நீதிபதி, உரிய அமைச்சரவை தீர்மானத்தை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி வரை அமுல்படுத்துவதற்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்ததுடன், அன்றைய தினம் மனுவை மீளப்பெறவும் உத்தரவிட்டார்.

மனுதாரர் நிறுவனத்தின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி விரான் கொரயா வாதாடினார். (அ)

## பதில் பொலிஸ்...

செயலகத்தில் வைத்து நேற்று வெள்ளிக் கிழமை வழங்கினார்.

இலங்கையின் 158 வருட பொலிஸ் வரலாற்றில் கான்ஸ்டபிளாக பொலிஸ் சேவையில் இணைந்து பொலிஸ் மா அதிபராக பதவி உயர்ந்தவர் பிரியந்த வீரசூரியவே. இவர், கொழும்பு பல்க லைக்கழகத்தில் நீதித்துறையில் பட்டம் பெற்றவர். இலங்கை சட்டக் கல்லூரி யில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமா ணம் செய்து கொண்ட இவர், பிரதி பொலிஸ் மா அதிபராக பதவி உயர்வு பெற்றிருந்தார்.

36 வருடங்கள் பொலிஸ் துறையில் சேவையாற்றிய பிரியந்த வீரசூரிய களங் கமற்ற சேவையை ஆற்றியுள்ளார் என்று 10 பிரதி பொலிஸ் மா அதிபர்கள் கடிதம் வழங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப் பட்டது.

பதில் பொலிஸ் மா அதிபராக நியம னம் பெற்ற பிரியந்த முன்னர் வடமத்திய மாகாணத்துக்கு பொறுப்பான மூத்த பிரதி பொலிஸ் மா அதிபராக சேவை யாற்றியிருந்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது. (ஐ)

## வடக்கு விவசாய...

திருநெல்வேலியில் அமைந்துள்ள விவ சாய திணைக்கள பணிமனையில் நடத் திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

மேலும், வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பில் "சூழல்நேய நிலைபேறான விவசாய யுகம் நோக்கி," எனும் தொனிப்பொருளில் இந்த ஆண்டு விவசாயக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

திருநெல்வேலியில் அமைந்துள்ள விவசாயப் பயிற்சி நிலையத்தில் எதிர்வ ரும் ஒக்ரோபர் 2ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகும் இந்தக் கண்காட்சி 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது. அத்துடன், 30இற்கும் மேற்பட்ட விடயத் தலைப்பு களை உள்ளடக்கியதாக கண்காட்சி ஏற் பாடு செய்யப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஆசிய அபிவிருத்தி வங்கி தலைவர் பதவிக்கு ரணில்?



கொழும்பு, செப். 28

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் பதவிக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பெயர் முன்மொழியப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் முதல் அப்பதவியை ஏற்குமாறு அவரிடம் ஏற்கனவே கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதற்கான விருப்பத்தை இதுவரை தெரிவிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயல்பட்ட விதத்தை அவதானித்த பின்னரே, குறித்த பதவிக்கு முன்னாள் ஜனாதிபதியின் பெயர் பரிந்துரைக்கப்பட்டதாக ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பிட்டுள்ளது.

மேலும், பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுத்த செயற்பாட்டில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகள் உலகிற்கு முன்னுதாரணமாக அமைந்துள்ளதாகவும் ஆசிய வங்கி குறிப்பிட்டுள்ளது. (அ)

# விடை பெறுகிறார் விக்கி?

கொழும்பு, செப். 28

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் இளைஞர்களுக்கு வழிவிடும் வகையில் இம்முறை பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட மாட்டார் என கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு நவம்பர் 14 ஆம் திகதியன்று பாராளுமன்ற தேர்தல் நடத்தப்படவுள்ள நிலையில் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பாக தமிழ் மக்கள் கூட்டணியின் கட்சியினரிடையே நடைபெற்ற கூட்டத்தில் குறித்த தகவலை விக்னேஸ்வரன் தெரிவித்தாரென அறிய முடிகிறது.

2013 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் அரசியலில் பிரவேசித்து வடக்கு மாகாண முதலமைச்சராக தெரிவான விக்னேஸ்வரன், 2019 நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி சார்பில் போட்டியிட்டு பாராளுமன்றுக்கு தெரிவானார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# முன்னாள் இராணுவ சிப்பாய் தொட்டியிலிருந்து சடலமாக மீட்பு

கொழும்பு, செப். 28

அநுராதபுரம் , பிஹிம்பியகொல்லேவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மலசலகூட கழிவு நீர் தொட்டியிலிருந்து ஓய்வு பெற்ற இராணுவ சிப்பாய் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம், பிஹிம்பியகொல்லேவ பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய ஓய்வு பெற்ற இராணுவ சிப்பாய் ஒருவரே சடலமாக மீட்கப்பட்டார்.

சடலமாக மீட்கப்பட்டவர் தனது வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டின் மலசலகூட கழிவு நீர் தொட்டியிலிருந்து துர்நாற்றம் வீசுவதாக அயல் வீட்டார் சடலமாக மீட்கப்பட்டவரின் மகனிடம் தெரிவித்துள்ளனர்.

பின்னர், சடலமாக மீட்கப்பட்டவரின் தாயும் மகனும் வீட்டின் மலசலகூட கழிவு நீர் தொட்டியைச் சோதித்துப் பார்த்தபோது சடலத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

இதனையடுத்து, சடலமாக மீட்கப்பட்ட ஓய்வுபெற்ற இராணுவ சிப்பாயின் தாயும் மகனும் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட ஓய்வு பெற்ற இராணுவ சிப்பாய் எவரேனும் நபரால் கொலை செய்யப்பட்டு மலசலகூட கழிவு நீர் தொட்டியில் வீசப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (அ)

# இந்திய மீனவர்கள் பிரச்னைக்கு தீர்வு!

## மோடியிடம் ஸ்டாலின் நேரில் கோரிக்கை

புதுடில்லி, செப். 28

**இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்படும் பிரச்னைக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி நிரந்தர தீர்வைக் காணவேண்டும் என தமிழக முதல்வர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இந்திய பிரதமரிடம் கையளித்துள்ள மனுவில் தமிழக முதல்வரின் இந்த வேண்டுகோள் இடம்பெற்றுள்ளது.

டில்லி சென்றுள்ள தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் நேற்றுக் காலை பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவதற்கு நிரந்தர தீர்வு வேண்டும், சென்னை மெட்ரோ 2ஆம் கட்டப் பணிகளுக்கான நிதியை மத்திய அரசு விடுவிக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய மனுவை பிரதமரிடம் கையளித்தார்.

பிரதமருடனான சந்திப்பு குறித்து செய்தியாளர்களை சந்தித்த முதல்வர் மு.க.ஸ்டாலின்-பிரதமர் மோடியை சந்திப்பதற்காக நேற்று டில்லி வந்தேன். இன்று (நேற்று) காலை பிரதமர் மோடியை சந்தித்தேன். இந்த சந்திப்பு ஓர் இனிய சந்திப்பாக அமைந்தது. பிரதமர் மோடி மகிழ்ச்சியுடன் எங்களிடம் பேசினார். இந்த மகிழ்ச்சியான சந்திப்பை பயனுள்ள சந்திப்பாக மாற்றுவது பிரதமரின் கைகளில்தான் இருக்கிறது. சந்திப்பின்போது 3 முக்கிய கோரிக்கைகளை வைத்துள்ளோம்.

முதலாவதாக சென்னை மெட்ரோ ரயில் முதல் கட்டப் பணிகளைப் போல் 2ஆம் கட்டப் பணிகளையும் மத்திய அரசும் தமிழக அரசும் இணைந்து நடத்த வேண்டும். அதற்கான மத்திய அரசின் நிதியை தாமதமின்றி விடுவிக்க நடவடிக்கை வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளேன்.

இரண்டாவதாக ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் கீழ் இந்த நிதியாண்டில் தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய முதல் கட்டத் தவணையை விடுவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளேன்.

மூன்றாவதாக தமிழ்நாட்டு மீனவர்களின் வாழ்வாதரப் பிரச்னைகளை எடுத்துச் சொல்லியுள்ளோம். நமது மீனவர்களை சிறைப்பிடித்து இலங்கைக் கடற்படையினர் துன்புறுத்துகின்றனர். இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களையும்இ மீன்பிடி படகுகளையும் உடனடியாக மீட்டுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டேன். இலங்கையின் புதிய அதிபரிடம் இதுபற்றி வலியுறுத்தக் கேட்டுக் கொண்டுள்ளேன்- என்றார். (அ)

# குருக்கள்புதுக்குளம் விபத்தில் இளைஞர் மின்சாரம் தாக்கி பலி



வவுனியா, செப். 28

வவுனியா குருக்கள் புதுக்குளத்தில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் மரணமானார்.

குருக்கள் புதுக்குளத்தில் இருந்து தம்பனைக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற செல்வகுமார் சர்மிலன் (வயது 30) என்பவர் மின்கம்பத்தில் மோதுண்ட நிலையில் மின்சாரம் தாக்கி பலியானார்.

குறித்த இடத்தில் மின்கம்பி அறுந்த நிலையில் காணப்படுவதனால் குறித்த மின்கம்பி முன்பே அறுந்து விழுந்திருந்ததா அல்லது விபத்தால் விழுந்ததால் மின்சாரம் தாக்கியதா என பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர். (அ)

# “பொருளாதார வளர்ச்சி 3 வீதத்தை விட அதிகம்”

கொழும்பு, செப். 28



சர்வதேச நாணய நிதியம் உட்பட சர்வதேச தரப்புகள் இந்த ஆண்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 2 சதவீதம் அல்லது அதற்குக் குறைவாகக் காணப்படும் எனக் கணிப்பிட்டிருந்தாலும் பொருளாதார வளர்ச்சி 3 சதவீதத்தை விடவும் அதிகமாகப் பதிவாகும் எனத் தங்களது தரப்பு மதிப்பிட்டுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

நாணய கொள்கை மீளாய்வு தொடர்பில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

# ஐஸ்டன் மூவர் கைது

கொழும்பு, செப். 28

தலங்கமை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்தரமுல்லை பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தலங்கமை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 35, 38 மற்றும் 42 வயதுடைய மீகொடை மற்றும் பத்தரமுல்லை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவரிடம் இருந்து 10 கிராம் 800 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் மற்றையவர்களிடம் இருந்து 10 கிராம் 600 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் மற்றும் 10 கிராம் 400 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (அ)

# சிறையில் பிக்கு திடீர் மரணம்

கொழும்பு, செப். 28

பாலியல் துஷ்பிரயோக சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தேரர் ஒருவர் திடீரென சுகயீனமுற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 25 ஆம் திகதி உயிரிழந்தார் என்று அம்பாந்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

வீரவில பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வெஹெரபெலெஸ்ஸ பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றைச் சேர்ந்த 65 வயதுடைய தேரர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தத் தேரர் இரண்டு சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்த சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பின்னர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இதன்போது, இந்த தேரர் சிறைச்சாலையில் வைத்து திடீரென சுகயீனமுற்றுள்ளதோடு அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்ற வந்த நிலையில் உயிரிழந்தார். (அ)

# விபத்தில் பெண் பலி

கொழும்பு, செப். 28

பேருந்து மோதி மூதாட்டி ஒருவர் உயிரிழந்தார். நேற்றைய தினம் கண்டியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பேருந்து மோதியே இந்த மரணம் சம்பவித்துள்ளது.

விபத்தில் காயமடைந்த மூதாட்டி வரக்காப்பொல மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

அம்பேபுஸ்ஸ, வரக்காப்பொல பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதுடைய வயோதிபப் பெண்ணே உயிரிழந்தவராவார்.

விசாரணைகளை பொலிஸார் நடத்தி வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.09.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.